விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5012)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை (08.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020

### ஐ.ம.சு. கூட்டமைப்பு கூட்டத்தில்
## உறுப்பினர்களிடம் மன்னிப்பு கோரிய ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் 24

### நீண்டகால அரசியல் நெருக்கடிகளுக்கு
## புதிய அரசியல் அமைப்பே ஒரேதீர்வு - ஜே.வி.பி

(கொழும்பு)

நீண்டகால அரசியல் நெருக்கடிகள் மற்றும் தீர்வுகளுக்கு புதிய அரசியல் அமைப்பே ஒரே தீர்வாகும். புதிய அரசியல் அமைப்பினை உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக தெரிவித்தார்.

நாம்ஒருபோதும்நாட்டினை பிளவுபடுத்த விடமாட்டோம், 23

## கபே பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன்
### ஊவா ஆளுநராக நியமனம்



23

# வடக்கு மாகாண ஆளுநராக
# சுரேன் ராகவன் நியமனம்

### மனித எலும்புக்கூடுகள்
## மன்னாரில் நேற்றும் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் 225 ஆவது நாளாகவும் தொடரும் அகழ்வுப் பணிகளில் மேலும் சில எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 24

## வடக்கு ஆளுநராக தமிழர் வருவது இதுவே முதல் முறையாகும்

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இவருக்கான நியமனம் நேற்று வழங்கப்பட்டது. கலாநிதி சுரேன் ராகவன் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி ஊடகப் பிரிவு பணிப்பாளராகவும், ஜனாதிபதியின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். வடக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

(23ஆம் பக்கம் பார்க்க)



## நீதிமன்றில் பணம் திருடியவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றினுள் பணத்தை திருடிச் சென்ற நபரை துரத்தி சென்ற பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

நேற்று யாழ் நீதிமன்றில் பணம் வைப்பு பகுதியில் 23

## கிளிநொச்சியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உதயநகர் கிழக்கில் சிறு வியாபாரம் செய்து வரும் ஐயம்பிள்ளை நாகேசு (வயது 74) 24




03

## மக்கள் மீது அரசுக்கு அக்கறையில்லை – மகிந்த

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தினால் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும் என்று எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் 23



## எல்லை தாண்டிய நான்கு இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் இந்த வருடத்தில் முதலாவதாக கைது 24

## 2019 அரச செலவாக ரூபாய் 4,550 பில்லியன்
## மிகப்பெரிய பட்ஜெட்டுக்கு அமைச்சரவை ஒப்புதல்

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வரைபுக்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக மிகப் பெரிய வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றில் வரும் மார்ச் 5ஆம் திகதி முன்மொழியப்படவுள்ளது என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டில் அரச செலவீனமாக 4 ஆயிரத்து 550 பில்லியன் ரூபாயாக முன்மொழியப்படுகிறது. அரச இறை வருமானமாக 2 ஆயிரத்து 390 பில்லியன் ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், கடன் சேவைக்காக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2018ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட் 24

## ஹெரோயினுடன் கைதானவரை நீதிமன்றில் கோட்டைவிட்ட பொலிஸார்
### சில மணி நேரத்தில் மீளவும் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பொலிஸார் தகவல் வழங்காததால், மற்றொரு வழக்கில் சந்தேகநபருக்கு வழங்கிய பிணையில் குறித்த நபர் விடுவிக்கப்பட்ட சம்பவத்தால் நேற்று நீதிமன்றில் 23

## தமிழருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பந்தத்தை அழிக்க முடியாது - சுதந்திரக் கட்சி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடக்கு கிழக்கு மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பந்தத்தை இல்லாது செய்து விட முடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. 23

# பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் யாழ் வலயத்துக்கு நியமனம்

## கல்வி அமைச்சின் செயலீர் வழங்கினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்துக்கு இரண்டு பிரதிக் கல்வி பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிர்வாகத்துக்கான பிரதிக் கல்வி பணிப்பாளராக எஸ்.ரவிச்சந்திரனும் திட்டமிடலுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக தி.ஞானசுந்தரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு மாகாண விளையாட்டுத் துறைக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக எஸ்.ராஜசீலனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வழங்கியுள்ளார். (ம-10)


**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


# புத்தூர் சந்திக்கு அண்மையில் மதுபானசாலைக்கும் மாட்டிறைச்சி கடைக்கும் அனுமதியில்லை

## வலி. கிழக்கு பிரதேச தவிசாளர் அறிவிப்பு

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் சந்திக்கு அண்மையில் உள்ள மதுபான சாலைக்கும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள மாட்டு இறைச்சிக் கடைக்கும் இவ்ஆண்டுக்கான வியாபார உரிமப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என அதன் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், புத்தூர் சந்திக்கு அருகாமையில் உள்ள மதுபானசாலைக்கு முன்பாக மதத்தலம் காணப்படுவதாகவும் ஐம்பது மீற்றர் இடைவெளியில் பாடசாலை, வைத்தியசாலை போன்றன காணப்படுவதால் குறித்த பகுதியில் உள்ள மதுபான சாலைக்கு வியாபார அனுமதிப் பத்திரம் வழங்க முடியாது போனதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மாட்டு இறைச்சிக் கடைக்கும் இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்க முடியாதமைக்கு அருகில் நீர்வேலி அரசகேசரி ஆலயத்துக்கு செல்லும் பிரதான வீதி காணப்படுவதாலும் அருகில் பிரபலமான பாடசாலை அமைந்துள்ளபடியாலும் தமது சபை இவ்ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை நிறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)


ஸ்ரீ நாககன்னி அம்பாள் துணை



**சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்**



கொடியேற்றம் - இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி
தீ மிதிப்பு பெரு விழா - 15.01.2019 செவ்வாய்க்கிழமை
தைப்பொங்கல் அன்று நண்பகல் 12.00 மணி
கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்
சாமஸ்ரீ, தேசமான்ய, சமூக ஜோதி, சேவைநெறிச் செம்மல்
சித்தஞானகுரு இந்திரன் ஐயா
அனைவரும் வருக... அம்பாள் அருள் பெறுக...
(5045)



**Computer Courses**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B
Diploma in **Video Editing** — Premiere cs6, Photoshop CC, Adobe After Effect, Edius Pro 7, Pinnacle Studio, Nuendo
Diploma in **Auto CAD** — 2D & 3D Modeling
Adv. Dip. in **Hardware & Networking**
Programming & Web Development With **Java, C++, PHP**
**CCTV Camera** Technician
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, [illegible] வீதி, யாழ்ப்பாணம். Tel:.021 222 4403
நெல்லியடி M. M. V வீதி, [illegible] Tel:.021 226 2470
சாவகச்சேரி No.174, [illegible] வீதி, சாவகச்சேரி.(HNB அருகில்) Tel:.021 227 0776
சுன்னாகம் No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) Tel:.021 224 1970
சண்டிலிப்பாய் சீரணிச் சந்தி Tel:.021 225 6666
கிளிநொச்சி No.19 A9 வீதி, [illegible] Tel:.021 228 5656
[சி-5050]


# பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டக்கல்வி

(கொழும்பு)

பாடசாலை பாட திட்டத்தில் சட்டக்கல்வியை உள்ளடக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதிமற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு சட்டக் கல்வியை வழங்குவது பெறுமதிமிக்கவிடயமாகும் என. அந்த அறிக்கையில் அமைச்சர் தலதா அத்துகோரள குறிப்பிட்டுள்ளார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# 31-ம் நாள் நினைவஞ்சலி அறிவித்தல்



## திருமதி குணநாயகி நாகலிங்கம்

(இல.111, D.10, உருத்திரபுரம், கிளிநொச்சி)

02.12.2018 அன்று கனடாவில் சிவபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் 31-ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் (12.01.2019) சனிக்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லமான இல.111, D.10, உருத்திரபுரத்தில் நடைபெறும்.

எமது தாயார் எம்மைவிட்டு பிரிந்த துயரச் செய்தி கேட்டு எமது இல்லம் வந்து துயர் பகிர்ந்தும் பல வழிகளில் உதவிகள் புரிந்தும் உதவிய உறவுகள், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும், அன்றைய தினம் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறும் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கண்ணன் (மகன்)
0776102331
கா.நாகலிங்கம் (கனடா)
01416650079

தகவல்:
கா.நாகலிங்கம்
(ஓய்வுநிலை அதிபர்)
குடும்பத்தினர்

(சி-5042)

# மரண அறிவித்தல்

## வெற்றிவேலு இராஜ்குமார்



(ஓய்வுபெற்ற அதிபர் - சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, அகில இலங்கை சமாதான நீதவான்)

நெல்லியானைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மத்தி சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு இராஜ்குமார் அவர்கள் நேற்று முன்தினம் (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் அமரர்களான வெற்றிவேலு - பொற்கொடி தம்பதிகளின் அன்பு மகனும், அமரர்களான இளையதம்பி - அரியநாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, சந்திரகுமார் (அமரர்), சூரியகுமார் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்), விஜயலட்சுமி, தனலட்சுமி, செல்வலக்சுமி, சிறிக்குமார், நந்தகுமார் (பொலிஸ் சார்ஜன்ட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும், ஆனந்தன் (அமரர்), பாலரட்ணம், தனபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், வேல்விழி (உதவிக் கல்விப் பணிப்பாளர் - வவுனியா தெற்கு), சுகந்தி, வாசுகி, இராசநாயகம் (பலசரக்கு வாணிபம் - பறாளாய்), இராஜேஸ்வரி (அமரர்), மகேஸ்வரி (சிங்கப்பூர்), அழகர்சுந்தரம் (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிந்து, நிரூபன், சொரூபன், கிருபன், சைலரூபன் ஆகியோரின் பெரிய தந்தையும், செல்வராணி, புஷ்பராணி, இந்திராணி, கிருபானந்தன், கிருபாகரன், நந்தகுமார், நந்தினி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், குமாரரூபன், ரூபராஜ், ராஜராம், ஜீவறஜனி, குகராஜ், விஜிதா, சுமித்தா, பிருந்தாவன், விதுலன், விதுசன், மிதுசா, கபிலன், சிவபாலன், சிவசங்கர், சிவகரன், குகதாசன், விஜிதா, சிவதாஸன், ஜெகதாஸன், ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்


(7002)

# யாழ்.குடா நாட்டுக்குள் விநியோகிக்க

# திட்டமிட்டு இரகசியமாக கொண்டுவரப்பட்ட

# 117 கிலோ கஞ்சா நேற்றுக்காலை மீட்பு!

## கடற்படையினர், பொலிஸார் இணைந்து அதிரடி





(கரணவாய்)

**வடமராட்சி - பருத்தித்துறைக் கடற்பகுதி ஊடாக கடத்தப்பட்டு யாழ் குடாநாட்டுக்குள் விநியோகிக்கும் நோக்கில் திட்டமிட்டு இரகசியமான முறையில் கொண்டு வரப்பட்ட 117 கிலோகிராம் கஞ்சாவை பருத்தித்துறை கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து அதிரடியாக நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.**

பெரும் தொகையான கஞ்சா வடமராட்சி பருத்தித் துறை கடற்பகுதியூடாக யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படவுள்ளதாக பருத்தித் துறை கடற்படையினர் மற்றும் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

குறித்த தகவலை அடுத்து அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்ட பாதுகாப்புத் துறையினர் படகு மூலம் பருத்தித்துறை கடற்கரையில் கொண்டுவந்து இறக்கப்பட்ட கஞ்சா பொதிகளை வாகனத்தில் ஏற்றுவதற்கு முன்னர் அவ்விடத்தை சுற்றிவளைத்துள்ளனர்.

கடற்படை மற்றும் பொலிஸார் அவ்விடத்தை சுற்றி வளைத்ததையடுத்து கடத்தல்காரர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற கடற்படையினர் கஞ்சாவை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மீட்கப்பட்ட கஞ்சா 117 கிலோகிராம் என்றும், இச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பருத்தித் துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-9-60-101)

---

## நீதியரசர்கள் நியமனம்

# ஜனாதிபதி மைத்திரியின் சிபாரிசுக்கு அரசியலமைப்புச் சபை அங்கீகாரம்

(கொழும்பு)

மூன்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஒரு நீதியரசர் நியமனம் என்ற ஜனாதிபதியின் சிபாரிசுக்கு அரசியலமைப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டின் அரசியலமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது.

ஏற்கனவே உச்சநீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான நீதிபதிகள் வெற்றிடத்துக்கு அரசியலமைப்புப் பேரவை பரிந்துரைத்த பெயர்களை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டு நியமனம் வழங்கவில்லை.

இதன் காரணமாக உச்ச நீதிமன்ற நீதியரசருக்கான வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் ஜனாதிபதியின் சிபாரிசுக்கு அரசியலமைப்புச் சபை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

---

# சுதந்திரக் கட்சியில் விரிசல் ஏற்படவில்லை

## சாந்த பண்டார விளக்கம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எந்தவொரு விரிசலும் இல்லையென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால் அதை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்ப்பார்களென்றும் எதிர்காலத் தேர்தலுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து கூட்டமைப்பை கட்டியெழுப்புவரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுக்கு கட்சியுடன் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவர் அதனை தீர்த்த பின்னர் மீண்டும் கட்சியுடன் இணைந்துகொள்ளுமாறு தான் கோரிக்கை விடுப்பதாகவும் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். (இ-7)

---

# எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த உட்பட 47 பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையைப் பறிக்க சூழ்ச்சி

## அரசு மீது பீரிஸ் புகார்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட அவர் தரப்பின் 47 பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் சூழ்ச்சி செய்து வருகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு தடையாக தற்போது பாராளுமன்றத்தில் பொறுப்பு வாய்ந்த எதிர்கட்சி ஒன்று செயற்படுவது அரசாங்கத்திற்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும்என பொதுஜன பெரமுன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

# வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் பலர் எம்முடன்

## அமைச்சர் கிரியெல்ல எதிர்பார்ப்பு

(கொழும்பு)

மார்ச் மாதம் வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து 20க்கும் அதிகமான உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டு வரவு-செலவு திட்டத்தை வெற்றிபெறச் செய்வதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை பலப்படுத்துவார்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சரும் பாராளுமன்ற சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய கட்சியின் அரச்சாங்கம் வரவு-செலவு திட்டத்திற்கு தயாராகி வருகின்ற நிலையில் ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தும் செயற்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

---

# எதிர்க்கட்சிகளின் பாரிய கூட்டணியால் அரசு அச்சம் என்கிறார் வாசுதேவ

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் பாரிய கூட்டணி தொடர்பில் அரசாங்கம் அச்சம் கொண்டுள்ளது. அதனால் அதனை குழப்ப பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# ஆயிரம் ஆயிரம் காலம்

# அவுஸ்திரேலிய ஞாபகம் பூ மழை தூவும்

## புது சரித்திர சாதனை படைத்தது இந்தியா



கிண்ணத்தை முத்தமிடும் இந்திய அணித் தலைவர் ஹோலி

சிட்னியில் நடந்த 4ஆவதும் இறுதியுமான டெஸ்டின் 5ம் நாள் ஆட்டம் மழையால் ரத்தாக, இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அவுஸ் திரேலிய மண்ணில் புதிய வரலாறு படைத்தது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இந்தியா 622/7 ('டிக்ளேர்'). அவுஸ்திரேலியா 300 ஓட்டங்கள் எடுத்தன. பொலோ-ஒன் அடிப்படையில் 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மழையால் பாதிக் கப்பட்ட 4ஆம் நாள் அட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 5ம் நாள் ஆட்டம் மழையால் முழுமையாக ரத்தானது. இதனையடுத்து நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

தவிர, அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது இந்தியா. இதற்கு முன், 11 முறை டெஸ்ட் தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலியா சென்ற இந்தியா, 8 முறை தொடரை இழந்தது. மூன்று முறை தொடரை 'சமன்' செய்திருந்தது.

போட்டியின் நாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் இந்தியாவின் புஜாரா தெரிவானார்.



வெற்றிக் கிண்ணத்துடன் இந்திய அணியினர் குதூகலிக்கும் காட்சி

### இராசிக்கார ஹோலி

இந்திய அணித் தலைவர் ஹோலியின் நாணயச்சுழற்சி ராசி, சிட்னி டெஸ்டிலும் தொடர்ந்தது. இவர் நாணயச்சுழற்சியில் வென்ற 23 டெஸ்டில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் வலம் வருகிறது.

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் சிட்னியில் நடந்த 4வது டெஸ்ட் சமனிலையானது. இதனையடுத்து இந்திய அணித் தலைவர் விராட் ஹோலியின் நாணயச்சுழற்சி ராசி தொடர்கிறது. இவர் இதுவரை நாணயச் சுழற்சியில் வென்ற 23 டெஸ்டில் (19 வெற்றி, 4 'சமன்') இந்திய அணி தோற்றது இல்லை. இத்தொடரில் இவர் 3 போட்டிகளில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றிருந்தார். இதில் 2ல் இந்தியா வென்றது. ஒரு போட்டி சமனிலையானது.

### நான்காவது தொடர்

இந்திய அணித் தலைவர் ஹோலி, அந்நிய மண்ணில் 4ஆவது முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றினார். ஏற்கெனவே இரண்டு முறை (2015ல் 2-1, 2017ல் 3-0) இலங்கைக்கு எதிராக டெஸ்ட் தொடரை வென்ற இவர், மே.தீவுகளுக்கு எதிராக ஒருமுறை (2016ல் 2-1) கிண்ணத்தை கைப்பற்றினார்.

### 71 ஆண்டுகால ஏக்கம் தீர்ந்தது

ஆஸியுடனான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட்தொடரை இந்திய அணி 2-1 எனக் கைப்பற்றியது. இதன் மூலம் 71 ஆண்டுகளுக்கு பின், அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது. முன்னதாக இங்கு விளையாடிய 11 டெஸ்ட் தொடரில், 8ல் (1947-48, 67-68, 77-78, 91-92, 2007-08, 2011-12, 2014-15) இந்தியா தோற்றது. 3 தொடர் (1980-81, 85-86, 2003-04) 'சமன்' ஆனது.

### ஐந்தாவது அணி

அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்ற 5ஆவது அணி என்ற பெருமை பெற்றது இந்தியா. ஏற்கெனவே இங்கிலாந்து (13 முறை), மே.தீவுகள் (4), தென்னாபிரிக்கா (3), நியூசிலாந்து (1) அணிகள் இங்கு டெஸ்ட் தொடரை கைப்பற்றின.

### தென்னாபிரிக்காவில் கிடைக்குமா?

இந்திய அணி, இங்கிலாந்து (1971ல் 1-0, 1986ல் 2-0, 2007ல் 1-0), நியூசிலாந்து (1967-68ல் 3-1, 2008-09ல் 1-0), அவுஸ் திரேலிய (2018-19ல் 2-1) மண்ணில் நடந்த டெஸ்ட் தொடரில் ஒரு முறையாவது தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது. ஆனால் தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணி ஒரு முறை கூட டெஸ்ட் கிண்ணம் வென்றது கிடையாது. இதுவரை 7 முறை தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரில் விளையாடிய இந்தியா, 6ல் (1992-93, 96-97, 2001-02, 2006-07, 2013-14, 2017-18) தொடரை பறிகொடுத்தது. ஒரு முறை (2010-11) தொடர்சமனிலையில் முடிந்தது.

### முதல் ஆசிய அணி

அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய முதல் ஆசிய அணி என்ற சாதனை படைத்தது இந்தியா. இங்கு விளையாடிய 12 தொடர்களில், ஒரு முறை கிண்ணம் வென்றது. எட்டு முறை தொடரை இழந்தது. மூன்று முறை தொடர் சமனில் முடிந்தது.

பாகிஸ்தான் அணி, இங்கு விளையாடிய 12 தொடர்களில் 9ல் ஏமாற்றியது. மூன்று தொடர் சமனில் முடிந்தன. இலங்கை (6 தொடர்), பங்களாதேஷ் (1) அணிகள் இங்கு பங்கேற்ற அனைத்து தொடர் களையும் பறிகொடுத்தன.

### எட்டு நாடுகள்

இங்கிலாந்து, மே.தீவுகள், நியூசிலாந்து, சிம் பாப்வே, இலங்கை, பாகிஸ்தான், அவுஸ் திரேலியா, பங்களாதேஷ் என, 8 நாடுகளில் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இந்திய அணி, தென்னாபிரிக்காவில் மட்டும் டெஸ்ட் கிண்ணம் வென்றதில்லை.

### மகத்தான சாதனை

இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி கூறுகையில், "அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி கிண்ணம் வென்றதை மகத்தான சாதனையாக கருதுகிறேன். உலக கிண்ணம் வென்றபோது நான் இளம் வீரர். அப்போது அணியில் இருந்த மற்ற வீரர்கள் உணர்ச்சிவசப்பட்டதை கண்டேன். அதே உணர்வு தற்போது எனக்கு ஏற்பட்டுள்ளது. இத்தொடர் இந்திய அணிக்கு சிறப்பான அடையாளம் கொடுத்துள்ளது. வரலாற்று சாதனை படைத்த இந்திய அணியை வழி நடத்திய தற்காக பெருமை கொள்கிறேன் என்றார்.

### ஓட்ட இயந்திரம் புஜாரா

இத்தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் புஜாரா முதலிடம் பிடித்தார். இவர், 4 டெஸ்டில், 3 சதம், ஒரு அரைசதம் உட்பட 521 ஓட்டங்கள் எடுத்தார். சிறப்பாக செயல்பட்ட இவருக்கு ஆட்ட நாயகன் (சிட்னி டெஸ்ட்) மற்றும் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது. அடுத்த இரண்டு இடங்களை இந்தியாவின் ரிஷாப் பண்ட் (350), அணித் தலைவர் ஹோலி (282) கைப்பற்றினர். அவுஸ்திரேலியா சார்பில் மார்கஸ் ஹரிஸ் (258 ஓட்.), டிராவிஸ் ஹெட் (237) அதிக ஓட்டங்கள் எடுத்தனர்.

### பும்ரா '21'

இத்தொடரில் அதிக விக்கெட் கைப்பற்றிய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் பும்ரா, அவுஸ்திரேலியாவின் நேதன் லயன் முதலிடத்தை பகிர்ந்து கொண்டனர். இவர்கள் இருவரும் தலா 21 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். அடுத்த இடத்தில் இந்தியாவின் மொகமட் ஷமி (16 விக்கெட்) உள்ளார்.

### ஜனாதிபதி வாழ்த்து

இந்திய அணிக்கு இந்திய் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் 'டுவிட்டரில்' வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணிக்கும், அணித் தலைவர் ஹோலிக்கும் வாழ்த்துக்கள். துடுப்பாட்டம், பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட இந்திய வீரர்கள், நம்மை பெருமை பெற வைத்தனர்," என தெரிவித்துள்ளார்.

### பிரதமர் பாராட்டு

இந்திய அணிக்கு, பிரதமர் மோடி 'டுவிட்டரில்' வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்த இந்திய அணியினருக்கு பாராட்டுக்கள். ஒட்டு மொத்த வீரர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி, தொடர வாழ்த்துகிறேன்," என தெரிவித்துள்ளார்.



புஜாரா டான்ஸ்'

சிட்னி டெஸ்ட் சமன் என அறிவித்த உடன் 'டிரசிங் ரூமில்' இருந்த இந்திய அணியினர் உற்சாகத்தில் கூக்குரலிட்டனர். பின், மைதானத்திற்கு வந்த இந்திய வீரர்கள், தொடர் நாயகன் புஜாராவை சுற்றி நின்று கைகளை அசைக்காமல், உடம்பை முன்னோக்கி லேசாக வளைத்துக் கொண்டு ஒருவித நடனமாடினர்.

# ஒரு தசாப்த காலத்தின் பின்னர்

# இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின்

# எண்ணிக்கையை உறுதிப்படுத்த முயற்சி!

## இரு சர்வதேச அமைப்புக்கள் நடவடிக்கை; பெயர்களைப் பதிவு செய்யக்கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்களில் கொல்லப்பட்டவர்கள் குறித்த எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ள இரு சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பும் மனித உரிமைகள் தரவுகள் ஆய்வுக் குழுவுமே இந்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.**



இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ளவர்கள் தங்களிடமுள்ள விபரங்களை வழங்கவேண்டும் என இரு அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆகக்குறைந்த அளவில் இறந்தவர்களின் பெயர்களை சேகரிப்பதன் மூலமாவது அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இறுதிப்போரில் ஏற்பட்ட உயிரிழப்புகளை கணக்கிடுவதற்கு இந்த எண்ணிக்கை முக்கியமானது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் சமூகங்களுக்கு மிகவும் முக்கியமான நினைவுகூருதலிற்கும் இது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்த காலத்தின் பின்னரும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை என்னவென்பது எவருக்கும் தெரியாது.

கொல்லப்பட்டவர்களின் இறுதி எண்ணிக்கையை கணிப்பிடுவதற்கு புள்ளிவிபர அணுகுமுறையை பயன்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம் 18-19 ஆம் திகதிகளில் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கு இந்த முறை பயன்படுத்தப்பட்டது எனவும் இரு சர்வதேச அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்களை கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கையை உறுதிசெய்வதற்காக அவர்களது குடும்பத்தவர்கள், உறவினர்கள், அயலவர்களுடன் உரையாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என மனித உரிமைகள் தரவுகள் ஆய்வுக்குழுவின் தலைவர் பட்ரிக் போல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல அமைப்புகள் ஏற்கனவே இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் பெயர்களை பதிவு செய்வதன் மூலம் ஏற்கனவே காணப்படுகின்ற தகவல்களை புதுப்பித்துக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்று கிலோ கஞ்சா பறிமுதல்! இருவர் நேற்று அதிகாலை கைது

## விஷேட அதிரடிப்படை நடவடிக்கை

(கரணவாய்)

கஞ்சா கடத்திய இருவரை கைது செய்து அவர்களிடமிருந்து மூன்று கிலோ கஞ்சாவை மீட்ட விஷேட அதிரடிப்படையினர் அவற்றை தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் கஞ்சா கடத்தப்படுவதாக விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பருத்தித்துறை-மருதங்கேணி வீதியிலுள்ள அம்பன் வைத்தியசாலைக்கு அருகாமையில் விஷேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த மோட்டார்சைக்கிள் ஒன்றை மறித்து சோதனையிட்ட போது மூன்று கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

இதனையடுத்து அதனை எடுத்து வந்த மருதங்கேணி பகுதியைச் சேர்ந்த 24 மற்றும் 46 வயதுடைய இருவரையும் கைது செய்து பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# அரசாங்கம் மக்களை சமமாக மதிக்கின்றது

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

(மாத்தறை)

இந்த அரசாங்கம் அனைவருக்கும் சமமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் என்று நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களால் தாய் அல்லது தந்தையை இழந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஒழுங்கு செய்துள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் முதல் நாடு பூராகவும் அமுல்



படுத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 14 சிறுவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

08.01.2019

மார்கழி 24, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

துதியை முற்பகல் 11.29 மணிவரை

திருவோணம் முன்னிரவு 11.15 மணிவரை

சுபநேரம் 11.02-12.32 மணிவரை

இராகுகாலம் 3.32-5.02 மணிவரை

வளவன்

கிரகநிலை: செவ்; ராகு; சந், கேது; சூரி, புத, சனி; குரு, சுக்

சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

**மேடம்:** வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்:** வரவைக்காட்டிலும் செலவு கூடும், எடுத்த காரியத்தில் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள், தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவருடன் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், தனவரவுண்டு.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், எதிரிகள் விலகுவர், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் போட்டிகள் மாறும்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், புதிய சொத்துக்களை வாங்க முற்படுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.


**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பயணத்தால் பலனுண்டு.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உறவினர்களின் சந்திப்பால் சுபவிரயங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

# வடக்கின் ஆளுநராக மீண்டும் கூரே யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் றெஜினோல்ட்கூரேயை நியமிக்கக் கோரி யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் நேற்றுத் திங்கட்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சிவன் அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தமக்கு ஆளுநர் றெஜினோல்ட்கூரே தமிழ் பேசக்கூடியவராக இருக்கின்ற நிலையில் தமது தேவைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது எனத் தெரிவித்தனர்.

மேலும் மீண்டும் வடக்கு மாகாண ஆளுநராக றெஜினோல்ட்கூரேயை நியமிக்க கோரிய மூன்று மகஜர்களை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்திடம் கையளித்தனர்.

இப் போராட்டத்தில் சாவகச்சேரி சமுர்த்தி பயனாளிகள், சித்த மருத்துவ மாணவர்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-9)

## வருடாந்த அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை நாலுகால்மட ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை வரை பத்து நாட்கள் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள ளது.

பதினொராம் நாள் (18.01.2019) வெள்ளிக்கிழமை வைரவப் பெருமானுக்கு திருவூஞ்சல் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜையும் நடைபெறும். (இ)

## க.பொ.த.(உ/த) பெறுபேறு 2018

யா/சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி

கலைப்பிரிவு

ந.யதுர்சிகா-3ஏ, வி.நிரோஜினி-3ஏ, கி.கிளமென்ரினி-ஏபிசி, அ.ஒக்ஷிகா-ஏபிசி, ஸ.பிரியவதனி-ஏபிசி, அ.அருள்சீலி-ஏபிஎஸ், ஜோ.சித்திரா-ஏ2சி, ஜோ.டினிஸ்ரிக்கா-ஏ3சி, அ.மரியகொறற்றி-ஏசிஎஸ், ரா.ஆன்செளனியா-ஏசிஎஸ், கி.மேரிசர்மினி-2பிசி




## விவசாயிகளே விபரங்களை விரைவாக ஒப்படையுங்கள்

(யாழ்ப்பாணம்)

விவசாய அமைச்சின் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் வருடம் நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பான முழுமையான விபரங்களை விவசாயிகள் தங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக விரைவாக ஒப்படைக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

## உதய நாளும் பரிசுத் தினமும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாளும் பரிசுத்தினமும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் வாழ்வக செல்லா மண்டபத்தில் (சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்), வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை பரீட்சைத்திணைக்கள பிரதிப் பரீட்சை ஆணையாளர் செ.பிரணவதாசன், சிறப்பு விருந்தினர்களாக வலிதெற்கு பிரதேச சபை தவிசாளர் க.தர்ஷன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (விசேட கல்வி) யோ.துஷ்யந்தன், ஓய்வுநிலை ஆசிரியர் செ.திருச்செல்வநாதன், யாழ்.வர்த்தகத் தொழிற்றுறை வேளாண் மகளிர் தலைவரும், வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றிய உப தலைவருமான திருமதி. சைலஜா செல்ரன் ரூபேந்திரா, கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 202.5 மில்லியன் ரூபாய் எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு இவ்வருடம் 202.5 மில்லியன் ரூபாய் நிதியை எதிர்பார்த்து திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் தி.சிவகுமார் தெரிவித்தார்.

வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக தமது திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அதற்கான நிதி அங்கீகாரம் விரைவில் கிடைத்துவிடுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இத் திட்டத்துக்காக ஒதுக்கப்படும் நிதியில் கடந்த வருடத்தில் நிறைவு செய்யப்படாத செயற்றிட்டங்களுக்காக 31.8 மில்லியன் ரூபாவும் முடிவுற்ற செயற்றிட்டங்களுக்கான கட்டு நிதி செலுத்துவதற்கு 52.8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளதாகவும் மீதமுள்ள 117.3 மில்லியன் ரூபாவை மாவட்டத்திற்கு 23 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் குறித்த நிதி மாவட்டங்களின் தேவைக்கேற்ப மாறுபடும் எனத் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விவலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரை வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மன்றத்தில் இடம்பெறுமென யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-10-136)

## யாழ்.மாநகரசபையால் வீதிகள் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் முத்திரைவரியின் மூலம் பல வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் யாழ்.மாநகரசபையின் 02ஆம் வட்டாரமான கந்தர்மடம் வடமேற்கு வட்டாரத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்தின் முயற்சியால் இரு வீதிகள் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீதிப் புனரமைப்பு வேலைகள் யாவும் நிறைவு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. மக்கள் போக்குவரத்துச்செய்ய முடியாதவாறு மண் வீதிகளாக இருந்த யாழ்.பல்கலைக்கழக கோயில் வாசலுக்கு முன்னுள்ள வீதி மற்றும் மிலேனியம் விடுதிக்கு அருகிலுள்ள வீதி என்பனவே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன. (இ-7)

## சைவப்புலவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில் 2019 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சை தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-7)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் (2019) நாளை மறுதினம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் ந.சிவரஞ்சன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம், சிறப்பு விருந்தினராக சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி கி.செந்தூரன், சங்கானை பிரதேச செயலக கணக்காளர் ஞா.லோகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

### குருநகர் பிரதேச வைத்தியசாலையில்

## ஊழியர்கள் பற்றாக்குறையால் நோயாளர்களுக்கு அசௌகரியம்

(குருநகர்)

குருநகர் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையால் நாளாந்தம் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறித்த வைத்தியசாலைக்கு நாளாந்தம் அதிகமான நோயாளர்கள் சேவை பெறச் செல்வதாகவும் இரு வைத்தியர்கள் நோயாளர்களைப் பார்வையிட இருந்தும் பதிவிலக்கம் வழங்கும் ஊழியர்கள் இரு சேவைகளைச் செய்வதால் நீண்ட நேரம் தாம் வைத்தியசாலையில் காத்திருக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு மருந்து கட்டும் ஊழியரே பதிவிலக்கத்தையும் வழங்குவதால் அவர் நோயாளர்களுக்கு மருந்து கட்டி வரும் வரையில் வைத்தியர் பார்வையிடுவதற்கு நோயாளர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே இப் பிரதேச மக்களின் தேவையை அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-106)








கிராமிய உழைப்பாளர் சங்கமும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு அண்மையில் மருதனார்மடம் விவசாயக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தலைவர் இன்பன்,தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் கேமன் குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அதிவேக நெடுஞ்சாலைகளை இனிமேல் அமைக்க வேண்டாம்

## ரத்ன தேரர் எம்.பி. எதிர்ப்பு



(மாத்தறை)

இந்நாட்டின் ஆட்சியாளர்களிடம் நாம் தொடர்ந்து தெரிவிப்பது புகையிரப் பாதைகளை அமைக்காமல் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்க வேண்டாம். ஏனெனில் வறிய மக்கள் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்க மாட்டார்கள். அவர்களுக்கு பேருந்துகளில் செல்லக் கூட பணமில்லை.

எனவே அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்க வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதற்குக் காரணம் ஊழல் செய்வது இலகு என்பதாலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் திருடர்களைச் சிறைக்கு அனுப்புவதாகத் தெரிவித்தவர்களே திருடுகின்றனரென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போலிக் கச்சேரி நடத்திய 30 வயதுப் பெண் கைது!

## 4 துப்பாக்கிகள் பறிமுதல்

(ராஜகிரிய)

ராஜகிரிய பிரதேசத்தில் போலிக் கச்சேரியொன்றை நடத்திச் சென்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின் போது சந்தேக நபரான பெண்ணிடமிருந்து 4 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக குறித்த பெண் தனது கணவருடன் இணைந்து போலியான முறையில் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றை தயாரித்து வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

30 வயதுடைய குறித்த பெண்ணின் கணவர் அப்பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:A/L,மலேசியா, தனியார்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/9061

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 11 உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:A/L, ஹோட்டல், கனடா P.R
தொ.இ: B/9068

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5' 7"
தகைமை/தொழில்:A/L, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், அரச தொழில்
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/9069

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 14 உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:B.sc, M.sc, Suppermarket,UK,Not P.R
எதிர்பார்ப்பு: வெளிநாடு P.R உள்ளவர்
தொ.இ: B/9070

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 18 செவ் 1 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்:B.com,M.com, Internal audit, அரச தொழில்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்
தொ.இ: G/1830

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 28 உயரம்: 4' 3"
தகைமை/தொழில்:A/L, முகாமைத்துவ உதவியாளர், அரச தொழில்
எதிர்பார்ப்பு:வைத்தியர்,பொறியியலாளர்
தொ.இ: G/1834

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36 செவ் 7 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/1837

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 63 உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:B.A பட்டதாரி, ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்
தொ.இ: G/1847

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# ஜனாதிபதி யார் என்பதை மகிந்தவே தீர்மானிப்பார்

## ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி யார் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து புதிய கூட்டணியமைப்பது தற்போது உறுதியாக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்சியின் கொள்கைளையும் முன்னிலைப்படுத்தி வெற்றி பெறுபவரையே ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ களமிறக்குவார் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்தை எதிர்க் கட்சியே விமர்சிக்கும். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை அக்கட்சியினரே கடுமையாக சாடும் நிலை ஏற்பட்டுள்ளது. நிலையற்ற அரசாங்கம் ஒன்று உருவாகுமாயின் அதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு முழுமையாக கிடைக்கப் பெற்றிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமைக் காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டு குற்றச்சாட்டில் மகிந்த அணி மாநகர உறுப்பினர் கைது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கே.ஜி.குலதிஸ்ஸ கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொட பகுதியிலுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் இவர்கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினரை புதுக்கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெமட்டகொட பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 34 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்திருந்தனர்.

இதன் பின்னர் அமைச்சர் அர்ஜுன் ரணதுங்கவின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

# ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சி.பி.ரட்நாயக்க எம்.பி.வலியுறுத்து



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வேதனமாக ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கி கொள்ளையர்களின் தற்போதைய ஆட்சி தொடர்பில் மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்ள எந்த நேரத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தயாராக இருக்கின்றது.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் 55 நாட்கள் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர் அடிப்படைச் சம்பளம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தி இறுதிக் கட்டத்தை அடைந்த நிலையில் 900 ரூபாய் அடிப்படை சம்பளம் வரையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு இருந்தன.

அத்தோடு எரிவாயு, எரிபொருளின் விலைகள் குறைக்கப்பட்டதை மக்கள் அறிவார்கள்.

இந்நிலையில் நீதிமன்ற தீர்ப்பின் படி அமைச்சர்களின் கையொப்பங்கள் செல்லுபடியற்றது என அறிவித்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் மக்களின் கருத்தை அறிந்து கொள்ள நாடாளுமன்ற தேர்தலைச் சந்திக்க நாம் தயாராக இருக்கின்றோம். அத்தோடு சில அமைச்சின் செயலாளர்கள் சுற்றுநிருபத்திற்கு மாறாக தொழில் தேவையானவர்களுக்கு தொழில் வழங்கி வருகின்றனர்.

இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமீரலியின் நடவடிக்கையைக் கண்டித்து செங்கலடியில் நேற்று விவசாயிகள் ஆர்ப்பாட்டம்




(செங்கலடி

மட்டக்களப்பு வாகனேரி நீர்ப்பாசன திட்டத்தினை உறுகாம நீர்ப்பாசன திட்டத்திலிருந்து பிரிப்பதற்கு இராஜாங்க அமைச்சர் அமீரலி எடுத்துவரும் முயற்சியைக் கைவிடுமாறு கோரி நேற்றுக் காலை செங்கலடி நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வாகனேரி திட்ட முகாமைத்துவக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள 14 அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம், முன்னாள் பிரதியமைச்சர் வி. முரளிதரன் (கருணா அம்மான்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மத்திய நீர்ப்பாசன திட்டத்தின் கீழுள்ள வாகனேரி நீர்ப்பாசன திட்டமானது பல வருடங்களாக உறுகாமம் நீர்ப்பாசன திட்டத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்திலிருந்து வாகனேரித் திட்டத்தை பிரிப்பதற்கு எந்தவொரு விவசாயிகளும் விரும்பாத நிலையில் புதிதாக நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சுப் பொறுப்பினைப் பெற்றவர் தான்தோன்றித்தனமாக விவசாய அமைப்புகளிடம் எவ்வித ஆலோசனைகளையும் பெறாமல் வாகனேரித் திட்டத்தினை பிரிப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளார். அத்துடன் மாவட்ட காணி மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சனி முகுந்தனிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டம் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதியிடம் ஆளுநர் பதவியை கேட்டுப் பெற்றுக் கொண்டேன்

## ஹிஸ்புல்லா தெரிவிப்பு



(திருமலை)

கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு இனி நிரந்தர தீர்வொன்று கிடைக்கும் என கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை எனக்கு வழங்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டேன்.

ஒரு வருட காலமே ஆளுநராக பதவி வகித்து விட்டு அடுத்த வருடத்திற்குள் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பேன்.

மக்களுக்கு பல இன்னல்கள் காணப்படுகின்றன. இதற்காக பூரண இதய சுத்தியுடன் கிழக்கின் நண்பனாக செயற்படுவேன்.

அரச அதிகாரிகளாக இருப்பினும் மிகவும் சுமுகமாக பழகக்கூடிய நல்லெண்ணம் கொண்டு செயற்படுவேன்.

கிழக்கில் தொண்டராசிரியர்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறை சுகாதார ரீதியான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அனைத்தையும் உணர்ந்து இதற்கான நிரந்தர தீர்வொன்றை முன்வைத்து புதிய செயலணிகளை உருவாக்கி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

அரச அதிகாரிகளின் ஆதரவும் மக்களின் ஆதரவும் தேவை. அரச பணத்தில் தங்களுக்கான சம்பளம் பெற்றுத் தரப்படுகிறது. எனக்கும் இவ்வாறே கிடைக்கப்பெறுகிறது.

மக்களின் பிரச்சினைகளுக்கு மட்டுமல்ல கிழக்கில் இன முரண்பாடுகளற்ற சமுதாயத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எனக்கு ஆளுநர் பதவியை வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குங்கள்



**பாராட்டுங்கள் பெற்றோர்களே!**

இந்த வயதில் குழந்தைகளுக்குப் பாராட்டு ரொம்பப் பிடிக்கும். அவர்கள், க்ரேயான்ஸால் சுவரில் இரண்டு கோடுகள் போட்டாலும், கைதட்டிப் பாராட்டுங்கள். நிறங்களையோ, வடிவங்களையோ அவர்கள் சரியாகச் சொல்லும் போது உடனடியாக ஏதாவது பரிசு கொடுங்கள். அது உங்கள் முத்தமாகக் கூட இருக்கலாம்.

ஆனால், பரிசை உடனே கொடுங்கள். அப்போதுதான் குழந்தைகளுக்கு, 'நான் இதைச் சரியாகச் செய்திருக்கிறேன்' என்கிற எண்ணம் மனதில் அழுத்தமாகப் பதியும்.

**தண்ணீர்... எச்சரிக்கை!**

எல்லா பெற்றோர்களும் நிச்சயம் கவனமாக இருக்க வேண்டிய விஷயம் இது. 2-3 வயதுக்குள் இருக்கிற குழந்தைகள் துறுதுறுவென ஓடுவார்கள், வேக வேகமாக நடப்பார்கள்.

ஆனால், அவர்களுடைய குட்டிப் பாதங்களை உற்றுப் பார்த்தீர்களென்றால், அவை முழுமையாகத் தரையில் பதிந்திருக்காது. இப்படித் தரையில் பாதங்கள் பட்டும் படாமல் நடந்துகொண்டிருக்கிற குழந்தைகள் தண்ணீரிலும் விளையாடுவார்கள். பக்கெட்டில் இருக்கிற தண்ணீரைக் கண்டால் பொடிசுகள் குஷியாகிவிடுவார்கள் என்பது தெரிந்த விடயம் தானே! அப்படி பக்கெட்டில் இருக்கிற தண்ணீரில் விளையாடிக் கொண்டிருக்கிற குழந்தை, தவறி தலைக்குப்புற தண்ணீர் பக்கெட்டுக்குள் விழுவதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம்.

அப்படி விழுந்தால், அவர்களால் கத்தவும் முடியாது தண்ணீருக்குளிருந்து வெளியே வரவும் தெரியாது. விளைவு... நினைத்துப் பார்க்கவே நடுக்கமாக இருக்கிறது அல்லவா? அதனால், 2-3 வயதுக் குழந்தை இருக்கிற வீடுகளில் குளியலறையின் தாழ்ப்பாளை எப்போதும் பூட்டி வையுங்கள். அது முடியவில்லையென்றால், பக்கெட், டிரம்களில் தண்ணீர் பிடித்து வைக்காமலாவது இருங்கள்.

**மென்று சாப்பிடப் பழக்குங்கள்!**

'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்பார்கள். நன்கு மென்று சாப்பிடக் கற்றுக்கொடுக்க வேண்டிய வயதும் இதுதான். முக்கியமாகப் பட்டாணி, காராமணி போன்ற கொஞ்சம் பெரிய அளவிலான பயறுகளை நன்றாக மென்று விழுங்கச் சொல்லிக் கொடுங்கள்.

**வெந்நீர், சூடான பால் உஷார்!**

உடைந்த பொம்மைகள், பட்டன் பேட்டரிகள், பென்சில், க்ரேயான்ஸ் என்று குழந்தைகளைக் காயப்படுத்தும், அவர்கள் மூக்கில் போட்டுக்கொள்ளக்கூடிய, விழுங்கி விடக்கூடிய பொருள்களைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

அதனுடன் இப்போது இந்தத் தகவலையும் சேர்த்துக் கொள்ளுங்கள். பாதங்கள் தரையில் படாமல் நடக்கிற வயது இது என்பதால்.

அவர்கள் ஓடியாடுகிற இடங்களில் அல்லது அவர்கள் கைக்கெட்டும் உயரத்தில் வெந்நீர், பால் என சூடானவற்றை வைக்காதீர்கள். தப்பித் தவறி அவை குழந்தைகள் மீது பட்டுவிட்டால், ஆழமான கொப்புளங்கள் ஏற்பட்டுவிடும்... கவனம்.

**காரில் செல்லும்போது!**

வெளிநாடுகளில் குழந்தைகள் காரில் ஏறியவுடன் அவர்களுக்கு ஸீட் பெல்ட் அணிவித்துவிடுவார்கள். கண்ணாடியை ஏற்றி இறக்கும்போது கையைவிடுவது, கியரைத் தூக்கிவிடுவது, கார் ஓட்டுகிற அப்பாவின் மடியில் உட்கார அடம்பிடிப்பது என்றெல்லாம் காரை, குழந்தைகளின் விளையாட்டுத்திடலாக மாற்றாதீர்கள்.

இவை ஆபத்தாக மாறலாம். அப்பாவின் மடியில் குழந்தை உட்கார்ந்து கொண்டிருக்கையில் சடன் பிரேக் போடவேண்டிய நிலைமை வந்தால், காரின் ஸ்டீயரிங் குழந்தையின் நெஞ்சில் இடித்துவிடும், ஜாக்கிரதை.

# கூட்டு ஒப்பந்தம் தோல்வியடைந்ததற்கு 2 கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும்

## ஆட்சியாளர்கள் மீது வேலுகுமார் பாய்ச்சல்

(கண்டி)

கூட்டு ஒப்பந்தமானது தோல்வி கண்ட பொறி முறையாக மாறியதற்கு நாட்டை ஆண்ட இரு பிரதான கட்சிகளும் பொறுப்புக்கூற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலேயே கூட்டு ஒப்பந்த முறைமை உருவாக்கப்பட்டது. சிறப்பானதொரு சம்பள நிர்ணய முறையாகவும் உலக நாடுகளால் கூட்டு ஒப்பந்த முறை கருதப்படுகின்றது.

எனினும், அது இலங்கையில் ஏன் தோல்வி கண்டுள்ளது என்பது குறித்து விரிவாக நாம் ஆராய வேண்டும். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள் ஆரம்பகாலம் முதலே குறுகிய அரசியல் நோக்கங்களைக்கைவிட்டு, தூரநோக்குடன் செயற்பட்டிருந்தால் தற்போது அடிப்படைச் சம்பளமானது ஆயிரத்தை தாண்டியிருக்கும்.

எனினும், இரண்டு வருடங்களுக்கு ஒருதடவை சொற்பளவு சம்பளமே வழங்கப்பட்டுள்ளது. இது பெரும் அநீதியாகும். இதை ஆட்சியிலிருந்து அரசாங்கங்களும் கண்டுகொள்ளவில்லை.

அன்றே கூட்டு ஒப்பந்தத்தில் மூன்றாம் தரப்பாக அரசு தலையிட்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணங்களை வழங்கியிருந்தால் கூட்டு ஒப்பந்தமானது தோல்வி கண்ட சூத்திரமாக மாறியிருக்காது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் பதற்றம்

## அதிரடிப்படை குவிப்பு





(கொழும்பு)

கொழும்பில் தொலைக்காட்சி வலையமைப்பு வளாகத்தில் நேற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நிர்வாகத்தில் புதிதாக இருவரை இணைத்துக்கொண்டமைக்கு எதிராக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வளாகத்தில் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையினால் வன்முறை சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இதனை கட்டுப்படுத்த அதிரடிப்படை பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதன் போது ஊழியர்களுக்கும் அதிரடிப் படையினருக்கும் இடையில் அடிதடி மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திலிருந்து இடைநிறுத்தப்பட்ட 13 உறுப்பினர்கள் தலைமையிலான குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மனநலக் கோளாறு விவகாரம்

# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

## ஒரு இலட்சம் ரூபா செலுத்த உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மனநலக் கோளாறு எனப் பெண் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. அத்தோடு அரசுக்கு ஏற்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் சட்ட செலவினங்களை மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிவில் செயற்பாட்டாளரான தக்சிலா ஜெயவர்த்தனவின் ஆலோசனையின் பேரில், சட்டத்தரணி சிசிர குமார சிறிவர்த்தனவால் இந்த நீதிப்பேராணை மனு கடந்த ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

ஸ்ரீமாவட்ட நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக அங்கொடை மனநல ஆய்வகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பரிசோதனைக்கு உட்படுத்தப் வேண்டும் என்றும் மனுதாரர் அதில் கோரியிருந்தார்.

இதில் பொலிஸ்மா அதிபருடன் கோட்டை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதிக்கு மன நலக் கோளாறு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேற்செல் எனும் நீதிப்பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# பிரபல அரசியல்வாதியிடம் பணம் பெற்ற சிலர் இனவாதத்தை தூண்டுகின்றனர்

## இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் குற்றச்சாட்டு



(பதுளை)

பதுளை மாவட்டத்தின் பிரபல அரசியல்வாதி ஒருவரிடம் பணம் பெற்றுக்கொண்டு இனவாதத்தைத் தூண்டும் சமூக சீரழிவான செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் பெருந்தோட்ட கைதொழில் இராஜாங்க அமைச்சருமான வடிவேல் சுரேஷ் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தோடு கண்டி கலவரம் போன்று பசறையிலும் கலவரம் இடம்பெற விடமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக ஒரு சிலர் இனவாத போக்குடன் செயற்படுவது தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பொன்றை பதுளை ஹெரிடேஜ் விருந்தகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது எனக்கு எதிராகச் ஒருசிலர் இனவாத போக்குடன் செயற்பட்டு வருகின்றனர். அதற்கு எதிராக செயற்பட ஐக்கிய தேசிய கட்சியின் ஏனைய ஆதரவாளர்கள் முன்வந்துள்ளனர். அவர்கள் அவ்வாறு செயற்படும் சந்தர்ப்பத்தில் பசறை பிரதேசத்தில் ஒரு சுமுகமற்ற நிலவரம் ஏற்படும்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சியினர் என சொல்லிக்கொண்டு இந்த முறையற்ற செயற்பாடுகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் பல சமூகவிரோத செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள். பதுளை மாவட்டத்தின் பிரபல அரசியல்வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு இந்த சமூக சீரழிவான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது சம்பந்தமாக ஆராய்து முடிவெடுக்குமாறு பசறை பொலிஸாருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்திற்கும் அறிவித்துள்ளேன். அவர்கள் உடனடியாக தீர்வு காண்பதாக தெரிவித்துள்ளனர்.

திகன, மாவவெல்லையில் இடம்பெற்ற இனக்கலவரம் போல் பசறையில் நடைபெற நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். மக்களும் அவதானமாக இருக்க வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடவியலாளர் சந்திப்பில் ஊவா மாகாண சபை உறுப்பினர் ஆ.கணேசமூர்த்தி, பசறை ஐ.தே.கட்சியின் பிரதேச சபைத் தவிசாளர் உட்பட அனைத்து பசறை ஐ.தே.கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ-7)

## மதுபானம் அருந்தும் போது

# மாமன்-மருமகன் இடையே முரண்பாடு கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

(வரக்காபொல)

வரக்காபொல தனியார் ஆடைகள் தொழிற்சாலையொன்றுக்கு அருகில் நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர், அவரது சகோதரியின் மகனுடன் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த வேளையில் இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பின்னர் கைகலப்பாக மாறியதில், இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸாரின் .ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச் சம்பவத்தில் உயிரிழந்த நபர், துல்ஹிரிய - பங்களாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரெனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

## குறை'களை' பதிகம் 04



## தெருநாய்த் தொல்லை களைதல்

பொதுமக்கள் உரைத்தல்

வீதி யெங்கும் தெரு நாய்கள்
வில்லங்கம் தரும் எந்நாளும்
காவல் அரண் அகற்றியும்- அங்கு
காத்து நிற்கும் நாய்கள் மட்டும்
எஞ்சி நின்று நம்மவரை
எட்டிப் பார்த்துக் கடிக்கக் குரைக்கும்

முன்னம் சீருடையார்
மூவேளை தந்த உண்டி மறவா
நன்றி இதுவன்றோ

நாய் உரைத்தல்

வளர்த்தவன் நீ கைவிட
வந்தவன் எம்மை ஆதரித்தால்
அன்னவர்க்கு விசுவாசம் காட்டுதல்
நன்றிக்குரிய நம் கடனன்றே

பொதுமக்கள் உரைத்தல்

நம் தமிழ் மண்ணில்
நாய் வைரவர் வாகனம் என்றும்
முன்னம் திருவாசகம் தந்த
முதன்மந்திரி மணிவாசகர்
உன்னையே ஒப்பிட்டு நானூறு தடவை
நாயிற் கடையனேன் என்றாரே
இன்னம் நீ செய்வது முறையோ!

நாய் உரைத்தல்

உங்கள் வாக்கில் எம்.பியாகினோர்
கறுப்பு ஜூலைக் கலவரம் தந்த
ஐ.தே.கட்சியினரை ஆதரிக்கலாம் என்றால்,

கண்முழிக்க முன்னே! உரப்பையில் கட்டி
காவலரண் அருகில் நீவிர் போட,
அமரேந்திர பாகுபலியைப் போல
எமைத்தூக்கி பால் தந்து
பகலும் இரவும் உணவு தந்து ஆதரித்த
சீருடையர்க்கு நன்றி மறவாது
அவர் விட்டகன்ற இடத்தில் நின்று
குரைப்பது எம் கடன்தானே!

நாய்க்கேது ஒற்றுமை என்று
நாளும் நக்கலடித்தீர்
நன்கறிவீர் ஒற்றுமை இல்லாதது
உம் இனம் தான் என்று

உங்களால் கைவிடப்பட்ட தெருநாய்கள் நாம்
உங்கள் வீதியில் ஒன்றுகூடி ஓரணியில் நின்று
ஒற்றுமையாய் கூடிக்கதைத்து வாகனத்தின் மீது
பாய்ந்தடித்து பாடாய் விழுத்தியதில்
மாண்டவர் எத்தனை பேர் மீள முடியாமல்
விலா எலும்பு முறிந்தவர் எத்தனை பேர்

ஒன்று மட்டும் சொல்லுவோம்
தன்னிலும் எம் பிறப்பு மேல் என்று
உரைத்த மணிவாசகன் தந்த திருவாசகத்திற்கு
அரண்மனை தந்த வள்ளல் ஆறுதிருமுருகச்செல்வர்
எமக்கென காப்பரண் அமைத்துத் தந்தால்,
அங்கே நாம் இருக்கத்தயார்
கண்ணியவான் நம்மை காப்பார் என்ற நம்பிக்கையில்
இல்லையேல் ஏ.ஆர்.வி. மருந்தை
தாராளமாய் இறக்கி வையும்
அடிக்கடி அது உங்களுக்குத் தேவைப்படும்

பொதுமக்கள் உரைத்தல்

நாய் உரைத்ததை நன்றாய் கேட்டோம்
அவற்றுக்கும் ஒரு வாழ்விடம்
அமைத்துக்கொடுத்தால்,
நாய்களுக்கு நாம் செய்த பாவம் தீரும்
நம் மண்ணிலும் விபத்துக்கள் குறையும்

வாக்குக் கேட்டு வென்ற உள்ளூராட்சி சபையினரே
ஒன்றாய்க்கூடி ஒற்றுமையாய் ஆராய்ந்து
நாய்க் காப்பகத்திற்கு வருடாவருடம்
வரவு-செலவில் நிதி ஒதுக்கி
ஒரு புதுமை படையுங்கள்

புண்ணியவான் ஆறுதிருமுருகனார்
உடன் உரையாடி அவர் பணிக்கு உதவி,
தெருநாய்த் தொல்லை களைந்து
பிறப்பறுக்கும் புண்ணியப் பேறு பெறுவீர்

-கூத்தனார்-

# மன்னார் மனிதப்புதைகுழி விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளிலும் மனித எச்சங்கள் அடையாளம்



(மன்னார்)

மன்னார் நகர் மத்திய பகுதியில் சதொச கட்டடம் அமைப்பதற்காக தோண்டப்பட்ட பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த வளாகத்தின் உட்பகுதியானது முழுவதும் அகழ்வு செய்யப்பட்டு வந்தது. அகழ்வுப் பணியின் போதும் தொடர்ந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில் தற்போது 225 ஆவது நாளாக வளாகத்தின் வெளிப் பகுதிகள் அனைத்தும் தோண்டப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஒரு வார காலமாக வளாகத்தில் அடையாளப்படுத்தும் மற்றும் அப்புறப்படுத்தப்படும் பணிகள் குறைக்கப்பட்டு விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியின் சதொச வளாகத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பகுதி உள்ளூர் கடைத்தொகுதிக்கு செல்லும் ஒரு பகுதி மூடப்பட்டு விரிவுபடுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்குள்ளும் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தற்போது வரை 282 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 277 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (2-285)

# முல்லை.மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவும் விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வளமான விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையத்தில் தனது கற்றல் செயற்பாட்டை விரிவுபடுத்திய தாலேயே வெற்றி இலக்கை அடைய முழந்தது என அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றில் பௌதீக விஞ்ஞான பிரிவில் 3ஏ சித்தி பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுக் கொண்ட ஜெகதீஸ்வரன் நிறை நெஞ்சன் தெரிவித்துள்ளார்.

தனது வெற்றி தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வட்டக்கச்சி கிராமத்தில் வறுமைகோட்டுக்குட்பட்ட குடும்பத்தில் பிறந்த நான் ஆரம்பத்தில் இருந்து கல்வியில் அதிக கவனம் செலுத்தி வந்தேன். கல்விக்கு வறுமை தடை இல்லை என்பதற்கு சான்றாக எனது குடும்பத்தினர் எனக்கு பல வழிகளில் உதவினார்கள். க.பொ.த. சாதாரண தரம் வரை கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்திலும் க.பொ.த.உயர் தரத்தை மு/விசுவமடு மகா வித்தியாலயத்திலும் பயின்றேன்.

முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் உயர்தர கல்விக்காக வெளி மாவட்டங்களுக்குச் சென்று கல்வி கற்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இதனை கருத்தில் கொண்ட விசுவமடு கல்விச்சமூகத்தினர் விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையத்தை ஆரம்பித்தனர். அங்கு சென்று எனது கல்வியை விரிவுபடுத்தியே மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளேன்.

இது எமது மாவட்ட மாணவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவுள்ளது. எமது மாவட்டத்தில் கல்வி வளம் மற்றும் பௌதீக வளம் இருந்தும் வெளிமாவட்டங்களுக்குச் செல்வது மேலும் செலவினை ஏற்படுத்துவதுடன் நேரமும் வீண்விரயமாகிறது. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தமது மாவட்டத்தின் வளத்தை சரியான முறையில் பயன்படுத்துகின்றார்கள்.

கடவுள் நம்பிக்கையும் கற்பதற்கான ஊக்கமுமே என்னை சிறப்பாக வழிநடத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# மதுபானசாலையை மூடுமாறு கோரி கிராம அபிவிருத்தி சங்கம் கடிதம்

(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலையை மூடுமாறு கோரி வவுனியா அரசாங்க அதிபருக்கு குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதமொன்றை வழங்கியுள்ளது.

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக புதிதாக மதுபானசாலையொன்று திறக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த பகுதி மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதியாக காணப்படுவதுடன் கோவில்கள், வவுனியா பொது வைத்தியசாலை மற்றும் அரசாங்கத்தின் பாரம்பரிய உணவகம் என்பன அமையப்பெற்ற இடத்தில் மக்களுக்கு இடையூறாக மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இந் நிலையில் மதுபானசாலை அமைக்கப்பட வேண்டுமாக இருந்தால் குறித்த பிரதேசத்தின் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனினும் அவ்வாறான அனுமதி பெறப்படாமல் அரச அதிகாரிகள் சிலரின் துணையுடன் மதுபானசாலை திறக்கப்பட்டமை மற்றும் குறித்த கிராமத்தில் மக்களின் வாழ்வியல் சூழலுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டுக்குக் குறித்த மதுபானசாலை பாதகமாக அமையும் என்பதனை கருத்தில் கொண்டு அரசாங்க அதிபர் சமூக அக்கறை கொண்டவர் மற்றும் மக்களின் நல்வாழ்வுக்கான எதிர்பார்ப்புடையவர் என்பதனை முன்னிறுத்தி யாழ். வீதி மக்களினால் அரசாங்க அதிபரிடம் நேரடியாக கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. (2-250)

## மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க மன்னாரில் சுவரொட்டிகள்

(மன்னார்)

மன்னார் நகர மத்திய பகுதியில் அதிகம் மக்கள் நடமாடும் பகுதிகளில் இனம் தெரியாத சிலரால் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் சிவசேனை என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மும்மதத்தைச் சேர்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழும் நகரங்களில் மன்னார் மாவட்டம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் நேற்று முன்தினம் நள்ளிரவு மன்னார் நகரின் மத்திய பகுதி மற்றும் மன்னார் பொது விளையாட்டரங்கு என சில பகுதிகளில் சிவபூமி மதம் மாற்றிகள் நுழையாதீர்கள் என மத ரீதியான அடையாளப்படுத்தப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

எந்தவொரு தனி நபர்களும் எங்கள் மத ஒற்றுமையை இவ்வாறான சுவரொட்டிகள் மூலம் சீர்குலைக்க முடியாது என பொது மக்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறான மதவாத செயற்பாடுகளை உடன் நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-285)

# ரவிகரன், சிவாஜிலிங்கம் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் மீதான வழக்கு விசாரணை மே மாதம் 27 ஆந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 22.02.2018 இல் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன் மற்றும் எம்.கே.சிவிஜிலிங்கம் மீதான வழக்கு விசாரணை நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் குறித்த வழக்கு விசாரணை 27.05.2019 இற்கு தவணையிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# இளையோர் திறன்விருத்தி கற்கை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பெரண்டினா தொழில்வள நிலையத்தினால் நெறியாள்கை செய்யப்பட்டு கனனி தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இளையோர் திறன் விருத்தி கற்கை நெறியின் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் சிலாவத்தை தமிழ் வித்தியாலய கேட்போர் கூடத்தில் கனனி தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலர். ஐ.பிரதாபன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வெற்றிகரமாகக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 35 பயிலுநர்கள் இதன்போது விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு ஆங்கிலம் கனனி உள்ளடங்கலாக திறன் விருத்திக்கான பிரயோக செயற்பாடுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் இக்கற்கை நெறியில் உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களை பயிலுநர்களுக்கு வழங்கும் பொருட்டு ஒரு வாரத்தை கொண்ட விசேட கல்விச்சுற்றுலாவும் திட்டமிடப்பட்டு வழங்கப்பட்டது.

அத்துடன் அக்கற்கை நெறியில் புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம் பெற்றது.

இக்கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சுயதொழில் ஆர்வ பரீட்சையின்படி பெரண்டினா மேலதிக புலமைப்பரிசிலை வழங்கி நிபுணத்துவ கற்கைகளுக்கு உதவத் தயார் நிலையில் உள்ளது.

அத்துடன் இப்பயிலுநர்களின் திறன்களை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர வேலை வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

பெரண்டினா நிறுவனத்தின் இவ்வாறான செயற்பாடுகளில் இணைந்து தமது தொழிலுக்கு பிரவேசத்தை மேற்கொள்ளுமாறு பெரண்டினா தொழில் வள நிலையத்தின் மாவட்ட முகாமையாளர் குமாரசாமி தினேஷ் சகரு முல்லைத்தீவு இளைஞர்-யுவதிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலதிக தகவல்களை 021 492 7500 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (2-281)

# 150 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அங்கத்தவர் பணியாளர்களுக்கு நேற்று பளை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் 2 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான 150 குடும்பங்களுக்கான நிவாரண உலர் உணவுப் பொதிகள் சங்கத் தலைமை காரியாலயத்தில் வைத்து தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரினால் வழங்கப்பட்டன. (2)

# வெள்ள இடர் உதவி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் வழிகாட்டலில் ஒளிரும் வாழ்வு அமைப்பினால் இந்த பணி முன்னெடுக்கப்பட்டது.

வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் வைத்து மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை பாராளுமன்ற உறுப்பினர் மாணவர்களுக்கு வழங்கிவைத்தார்.(2-281)

# கிளாலி மக்களின் பிரச்சினைகளை சிறிதரன் எம்.பி.நேரில் ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளாலி கிராமத்துக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இதன்போது பயன்பாடற்ற காணிகளை விவசாயத் தேவைகளுக்காக மக்களுக்கு பகிர்ந்தளித்து விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதுடன் மக்களின் சுயசார்பு பொருளாதாரத்தை எவ்வாறு கட்டமைப்பது என்பது தொடர்பாகவும் ஆராய்ந்தார்.

அத்துடன் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், வெள்ளப் பாதிப்புக்களையும் பார்வையிட்டதுடன், அண்மைக் காலமாக கிளாலிப் பகுதியில் தன்னால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல அபிவிருத்தி திட்டங்களையும் பார்வையிட்டார்.

இந்தக் களப்பயணத்தில் பாராளுமன்ற உறுப்பினருடன் கட்சியின் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை உப தவிசாளர் கஜன், உறுப்பினர்களான த.றமேஸ், வே.கோகுலராஜா, கி.வீரவாகு தேவர் ஆகியோருடன் கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் செல்லா மற்றும் முகாமையாளர் அன்ரன் ,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2)

# ரவிகரன் உள்ளிட்ட ஏழுபேர் மீதான வழக்கு மார்ச் மாதம் ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச்சு மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2018.08.02ஆம்திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்ததுடன், மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளுக்கு தமது கோரிக்கைகளை முன்வைக்கச் சென்றபோது, நீண்டநேரம் கடந்தும் திணைக்களத்திற்குள் இருந்த அதிகாரிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது இருந்த நிலையில் அலுவலகம் சேதமாக்கப்பட்டது.

இவ்வாறு அலுவலகம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், 21.08.2018 அன்று தவணையிடப்பட்டு, அன்றைய தினம் வழக்கு விசாரணைகள் நடைபெற்று, 2018.10.30 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு, பின்பு குறித்த நாளில் இடம்பெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து 07.01.2019 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில்முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட ஏழு பேரும் நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானதைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. (2-281)

# குழாய்க்கிணறு திருத்தி அமைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனையிலுள்ள பொதுக் குழாய்க்கிணறு ஒன்று சேதமடைந்த நிலையில் நீண்டகாலமாக காணப்பட்டதையடுத்து பிரதேசசபை உறுப்பினர் இ.கவாஸ்கரினால் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

குமுழமுனை சந்தைக்கு அருகாமையிலுள்ள பொது குழாய்க்கிணறு நீண்ட காலமாக சேதமடைந்த நிலையிலிருந்துள்ளது.

இதையடுத்து கரைதுறைப்பற்று குமுழமுனை பிரதேச சபை உறுப்பினர் இ.சுவாஸ்கரின் கவனத்திற்கு இவ்விடயம் அப்பகுதி மக்களினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் அக்குழாய்க்கிணறு பிரதேச சபை உறுப்பினரின் நேரடித்தலையீட்டில் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. (2-281)



வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் இராணுவத்தினரும் கடற்படையினரும் இணைந்து கிணறுகள் சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் அண்மையில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம். (படம்-பனிக்கன்குளம்செய்தியாளர்)

# பாராளுமன்ற உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் 20 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 20 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

நாளை முல்லைத்தீவு அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் வைத்து இந்த துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. (2-281)

# மணல் ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 2019.01.24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.(2)





தைப்பொங்கல் தினம், நாகதம்பிரான் திருக்கதவு திறப்பு ஆகிய நிகழ்வுகளை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் தம்பிரான் இந்து இளைஞர் மன்றத்தினால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் மன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பேருந்து - மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது

## இளைஞன் படுகாயம்



(மன்னார்)

மன்னார் பள்ளங்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இ.போ.ச. பேருந்து ஒன்றும் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

நானாட்டான் பிரதேசத்திற்குட்பட்ட மடுக்கரை கிராமத்திலிருந்து மன்னார்நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்துடன் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே பயணித்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் பலத்த காயங்களுடன் வாய்க்காலுக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

பொதுமக்களால் விபத்துக்குள்ளானவர் மீட்கப்பட்டு மன் னார் பொது வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரச பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் முருங்கன் போக்குவரத்து பொலிஸாரினால் மேலதிக விசாரணைகளுக்காக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர் யூட் சைலன் (வயது-25) என்பது குறிப்பிடத்தக்கது. (2-285)

# உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு இடையூறாக கூட்டுவலைத் தொழிலில் புல்மோட்டை மீனவர்கள்

(பனிக்கன்குளம்)

கொக்குளாய் முதல் கொக்குத்தொடுவாய் இடையிலான களப்பு பகுதியில் உள்ளூர் மீனவர்களின. வாழ்வாதாரத்திற்கு இடையூறாக புல்மோட்டை மீனவர்கள் கூட்டு வலைத் தொழிலில் ஈடுபடுவதாக சென்.அன்ரனிஸ் மீனவர் சங்கத் தலைவர் வி.குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சென். அன்ரனிஸ் மீனவர் சங்கத் தலைவர் தெரிவிக்கையில்,

கொக்குளாய் முதல் கொக்குத்தொடுவாய் வரையிலுள்ள 9 கிலோ மீற்றர் களப்பு பிரதேசத்தை நம்பியே கொக்குளாய், புளியமுனை, கொக்குத்தொடுவாய் , கருநாட்டுக் கேணி ஆகிய பகுதிகளில் 450 குடும்பங்கள் வாழ்கின்றன.

இதன் பிரகாரம் களப்பு பிரதேசத்தில் இயந்திரப் படகோ அல்லது 1 3/4 இஞ்சிக்கும் குறைவான வாலைகளோ பாவிப்பதும் சட்டப்படியான குற்றம் ஆகும். இதன் காரணமாக எமது மீனவர் சங்கத்திற்குட்பட்ட மீனவர்கள் குல்லாவில் சென்றே தொழில் புரிவது வழமையாகும்.

இப் பகுதியில் தற்போது இறால் , மீன் ஆகியவற்றின் பெருக்க காலம் ஆகும். அதனால் இன்னும் மிக அவதானம் தேவையான காலமாகும். இதேநேரம் எமது மீனவர்கள் தினமும் தொழிலிற்குச் சென்று வலைகளை கடலில் போட்டுவிட்டு கரை திரும்பி மறுநாள் சென்றால் புல்மோட்டை மீனவர்கள் எமது மீனவர்களின் வலைகளை அறுத்து உள்நுழைந்து கூட்டுவலைகளைப்பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு புல்மோட்டை மீனவர்களின் செயலினால் எமது மீனவர்களின் தற்போதைய வாழ்வாதாரம் மட்டுமன்றி எதிர்கால வாழ்வாதாரமும் பாதிப்படைகின்றது. இது தொடர்பில் திணைக்களுக்கு தெரியப்படுத்தியும் உரிய தீர்வு கிடைக்கவில்லை.

எனவே இதற்கு கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (2-281)

# கண்ணிவெடி அகற்றப்படாத இந்திராபுரத்தை பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தவிசாளர் பார்வை



(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் காணப்படுகின்ற இந்திராபுரம் பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் நேரில் சென்று பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பகுதிக்கு விஜயம் செய்த தவிசாளர் தலைமையிலான குழுவினர் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடியுள்ளதுடன் விரைவாக குறித்த பணிகளை முன்னெடுக்க வேண்டிய தேவைப்படுகளையும் விளக்கியுள்ளார்.

இதன்போது மிக விரைவில் ஒருபகுதி விடுவிக்கபடும் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.கஜன், உறுப்பினர்களான ரமேஷ்,வீரவாகு தேவர்,கிராம மட்ட பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# பாரதம்

## புதுக்கோட்டையில் கோர விபத்து! பலி எண்ணிக்கை 10 ஆக அதிகரிப்பு




புதுக்கோட்டை திருமயம் பிரிவு சாலையில் வான், கொள்கலன் லொறியும் மோதிய விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் பலி எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. சாரதி உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் உயிரிழப்பு 10 ஆக உயர்ந்துள்ளது. ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் கோயில் வழிபாட்டுக்குப் பிறகு ஊர் திரும்பிய போது விபத்து நேரிட்டது. (4-7)

## திருவாரூர் தொகுதிக்கான இடைத்தேர்தல் இரத்து

### தேர்தல் ஆணையகம் அறிவிப்பு

திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 28ஆம் திகதி தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், தேர்தல் ஆணையகம் அதனை இடைநிறுத்தி உத்தரவிட்டுள்ளது.

திருவாரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.கவின் முன்னாள் தலைவருமான கருணாநிதி காலமானதைத் தொடர்ந்து அந்தத் தொகுதி வெற்றிடமானதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, திருவாரூர் தொகுதிக்கு எதிர்வரும் 28ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெறுவதுடன் 31ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படுமென்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

எனினும், கஜா புயலால் பாதிக்கப்பட்ட திருவாரூர் மாவட்டம் வழமைக்கு திரும்பாத நிலையில், இடைத் தேர்தலை இரத்துச் செய்யக் கோரி தமிழக அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுக்கொண்டன.

இந்த நிலையில், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம், திருவாரூர் தொகுதி இடைத் தேர்தலை இரத்து செய்ததுடன் பணிகளை நிறுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, திருவாரூர் இடைத்தேர்தலை ஒத்தி வைக்கக் கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாரிமுத்து, ரத்தினக்குமார் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## சீனாவில் பனிச்சிற்ப விழா







2019 ஆம் ஆண்டுக்கான 35 ஆவது ஹார்பின் சர்வதேச பனி மற்றும் பனி சிற்ப விழா கடந்த 05 ஆம் திகதி சீனாவில் ஆரம்பமானது.

வட சீனாவின் ஹய்லாங்ஜியங் மாகாணத்தின் தலைநகரான குளிர்ப் பிரதேசமான ஹார்பின் நகரில், டிசெம்பர், ஜனவரியில், மைனஸ் டிகிரி குளிர் நிலவும். உடலை உறைய வைக்கும் இந்த குளிரில், பனிச்சிற்ப திருவிழா நடக்கும்.

ஆண்டுதோறும் நடக்கும் இந்த திருவிழாவில் பங்கேற்பதற்காக, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இங்கு வருவர்.

இந்தாண்டுக்கான பனிசிற்ப திருவிழா 2019 கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

சீனா ஹார்பின் நகரில் நடைபெற்று வரும் பனிச்சிற்ப போட்டியில் 12 நாடுகளைச் சேர்ந்த குழுவினர் பங்கேற்று உள்ளதுடன் மைனஸ் 10 டிகிரி குளிர் உள்ள நிலையில் 64 போட்டியாளர்கள் தங்களின் கைத்திறமையையும், கற்பனை வளத்தையும் காட்டியுள்ளனர்.

பனிச்சிற்பங்களை கொண்டுள்ள இக்கண்காட்சி எதிர் வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இறுதி நாளில் சிறந்த சிற்பத்திற்கான பரிசுகளும் அளிக்கப்படும். (4-7)

### சபரிமலை விவகாரம்

## கேரளாவில் வன்முறையால் தொடர்ந்தும் பதற்றம் நீடிப்பு


(கண்ணூர்)

சபரிமலை விவகாரத்தில் கேரளாவில் வன்முறைச் சம்பவங்கள் நீடிப்பதால் மாநிலத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவியுள்ளது.

கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் பலத்த எதிர்ப்பு மற்றும் போராட்டங்களுக்கு மத்தியில் 50 வயதுக்கு உட்பட்ட 2 பெண்கள் கடந்த 2 ஆம் திகதி தரிசனம் செய்தனர். இதைத்தொடர்ந்து மாநிலம் முழுவதும் போராட்டமும், வன்முறை சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இதில் அரசியல் தலைவர்களின் வீடு மற்றும் கட்சி அலுவலகங்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

குறிப்பாக, கண்ணூர் மாவட்டத்தின் தலசேரி உள்ளிட்ட பகுதிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் பா.ஜனதா தலைவர்களின் வீடுகள் மாறி மாறி தாக்கப்படுவதால் பதற்றம் நீடித்துள்ளது.



தலசேரிமண்டலபா.ஜனதா இளைஞரணி தலைவர் ரிதிலின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொண்டர்களால் வெடிகுண்டு வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## தங்க... மு...



(காபூல்),

ஆப்கானிஸ்தான் நாட்டின் படாக்ஷான் மாகாணத்தில் நேற்று தங்கச் சுரங்கம் சரிந்ததில் 30 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ள ப... கோஹரின்... படுகை ப... பகுதிகளி... தாக நம்ப...

இதன... மல் அவ... தங்கம் ...

## மாடி பஸ் கவிழ்ந்து விபத்து 6 பேர் பலி; 50 பேர் காயம்



(பாங்கொக்)

தாய்லாந்தில் மாடி பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

தாய்லாந்து நாட்டின் ரோய் இட் மாகாணத்தில் உள்ள பனோம் பிராய் மாவட்டத்தில் இருந்து தலைநகர் பாங்கொக்குக்குச் சென்ற மாடி பேருந்தில் 50 இற்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். இந்த பேருந்து கோலோங் லுவாங் மாவட்டத்திலுள்ள ஒரு வீதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடியது. பின்னர் அந்தப் பேருந்து வீதியில் கவிழ்ந்தது.

இந்த பேருந்து விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (4-7)

## நில... 2...

(ஷிலே...

மேகா... விபத்தில்... உயிரிழந்...

நேற்... இடம்பெற்... (வயது-2... ஆகிய இ... கள் வி... உயிரிழந்... அதிகாரி...

இது ...

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம் அச்சத்தில் மக்கள் வெளியேற்றம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவிள் டெர்னட்டே நகரின் அருகே நேற்று அதிகாலை 6.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

பசுபிக் பெருங்கடல் பகுதியில் புவியியல் அமைப் பின்படி நிலநடுக்கங்களை அடிக்கடி சந்திக்கும் நெருப்பு வளையம் பகுதியில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவின் வடக்கு மலுக்கு மாகாணத்தில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

டெர்னட்டே நகரில் வடமேற்கே 175 கிலோமீற்றர் தூரத்தில் பூமிக்கு அடியில் 60 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6 அலகுகளாக பதிவானது.

அப்பகுதியிலுள்ள பல வீடுகள் நிலநடுக்கத்தால் பயங்கரமாக குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் உயிர் பயத்தில் தங்களது வீடுகளைவிட்டு வெளியேறினர்.

இந்தோனேசியாவின் சுமாத்ரா மற்றும் ஜாவா தீவுகளுக்கு இடையில் கடந்த மாதம் எரிமலை வெடிப்பை தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 400 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## நிபந்தனை... அமெரிக்க...

### தேசிய பாதுகா...

(டமாஸ்கஸ்)

சிரியாவிலுள்ள அமெரிக்க துருப்புக்களை மீளப் பெறுவதானது நிபந்தனைக்குட்பட்டதென அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் தெரிவித்துள்ளார். அதுகுறித்த நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும் துருக்கிக்கும் பயணம் மேற்கொண்டுள்ள அவர் இவ்விடயம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கு முன்னர் வடக்கு சிரியாவிலுள்ள குர்துகள் பாதுகாப்பாக இருப்பதாக துருக்கியின் உ... அவர் தெ...




தொட... ஐ.எஸ்.ஐ... டிக்கப்படு... விரும்புக... சுட்டிக்காட்...

இதே...

# வெளிநாடு

# ...ச் சுரங்கம் சரிந்ததில் ...து பேர் உயிரிழப்பு





...ா படாக்ஷான் மாகாணத்துக்குட்பட்ட ...ஹிஸ்தான் மாவட்டத்திலுள்ள ஆற்றுப் ...க பகுதியில் வசிக்கும் மக்கள் சுற்றுப்புறப் ...களில் பூமிக்கு அடியில் தங்கம் கிடைப்ப ...நம்புகின்றனர்.

...தனால், அரசின் உரிய அனுமதி பெறா ...அவர்களே சொந்தமாக சுரங்கம் வெட்டி ...ம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வகையில், சுமார் 200 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட ஒரு சுரங்கத்துக்குள் சிலர் நேற்று முன்தினம் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.


அப்போது, அந்த தங்கச் சுரங்கம் திடீரென்று சரிந்து விழுந்தது.

இந்த விபத்து தொடர்பான தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் அங்கு விரைந்தனர்.

அதற்குள் களமிறங்கிய உள்ளூர் மக்கள், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 30 பேரின் உடல்களை மீட்டனர்.

தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக படாக்ஷான் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் நிக் முஹம்மது நசாரி தெரிவித்துள்ளார். (4-7)

## கேளிக்கை விடுதியில் துப்பாக்கிச்சூடு 3 பேர் உயிரிழப்பு; 4 பேர் படுகாயம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் கேளிக்கை விடுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கலிபோர்னியா மாநிலத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டாரன்ஸ் பகுதியில் அமைந்துள்ள கேளிக்கை மையத்தில் நேற்று முன்தினம் திடீரென துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இந்தத்தாக்குதலில் 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட அனைவரும் ஆண்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர் பாக, பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டில் சுமார் 40 ஆயிரம் பேர் துப்பாக்கிச் சூடு தொடர்புடைய சம்பவங்களில் பலியானதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (4-7)


# ...லக்கரிச் சுரங்கத்தில் விபத்து ... பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(...ஷிலோங்)

...மகாலயா நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட ...தில் சுரங்கத் தொழிலாளர்கள் இருவர் ...ரிழந்தனர்.

...நற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ...பெற்ற இந்த விபத்தில் இலாட் பரேக் ...து-26) மற்றும் மோனோஜ் பசுமத்ரி ...ப இருவரே உயிரிழந்துள்ளனர். பாறை ... விழுந்ததன் காரணமாக இவர்கள் ...ரிழந்திருக்கலாமென மாவட்ட பொலிஸ் ...ாரி சில்வஸ்டர் தெரிவித்துள்ளார்.

...இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,



"இச்சுரங்கத்தை தனியார் இருவர் அனுமதியின்றி நடத்திவந்துள்ளனர். இந்நிலையில் அவர்களை தேடும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சிக்கிக் கொண்ட நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் நடவடிக்கை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை, கடந்த 13ஆம் திகதி சுரங்கத்தில் சிக்கிய 15 தொழிலாளர்களை மீட்கும் பணிகள் நேற்று 26ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

மீட்புப் பணிகளில் இணைந்து தேசிய பேரிடர் மீட்புப்படை, கடற்படை வீரர்கள், முகாமிட்டு அவர்களை மீட்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அங்கு தண்ணீரை வெளியேற்ற முடியாமல் மீட்புப் படையினர் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், அங்கு தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (4-7)

# ...னயின் அடிப்படையிலேயே ...க துருப்புக்கள் வெளியேறும்

## ...காப்பு ஆலோசகர் தெரிவிப்பு





...ன் உறுதியளிப்பைப் பெற இருப்பதாகவும் ...ர் தெரிவித்துள்ளார்.

...தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், ...ஸ்.ஐ.எஸ்.குழுவின் எஞ்சியவர்கள் தோற்க...ப்படுவதை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா ...நம்புகிறது என்றும் அவர் இதன்போது ...டிக்காட்டினார்.

...இதேவேளை கடந்த டிசெம்பர் மாதம் "அவர்கள் எல்லோரும் மீள வருகிறார்கள்" என டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார். இந் நிலையில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் திட்டமிட்ட அமெரிக்க துருப்புக்கள் வெளியேற்ற அறிவிப்பினை பல நாடுகளும் கடுமையாக விமர்சித்திருந்தன.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள், சிரியாவில் இருந்து அமெரிக்க துருப்புக்கள் 30 நாட்களுக்குள் திரும்புவர் என தெரிவித்தனர்.

ஐ.எஸ். பிடியில் இருந்து சிரியாவின் வடகிழக்கு பகுதியில் பெரும்பாலானவற்றை மீட்பதற்கு 2 ஆயிரம் வரையிலான அமெரிக்க படையினர் உதவியுள்ளனர்.

இருப்பினும் இன்னும் சில-பகுதிகள் ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது.


மேலும் ஐ.எஸ்.பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்தும் முகமாக குறித்த துருப்புக்களை தொடர்ச்சியாக அங்கு நிறுத்திவைக்க வேண்டும் என அமெரிக்க பாதுகாப்பு தரப்பினர் எண்ணியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(4-7)

# வரலாற்றில் முதன்முறையாக முடிதுறந்தார் மலேசிய மன்னர் சுல்தான் முகம்மது

(கோலாலம்பூர்)

மலேசிய வரலாற்றில் முதன்முறையாக அரசர் பட்டத்தை மன்னர் 5 ஆவது சுல்தான் முகம்மது துறந்துள்ளார். 1957 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற மலேசியாவில் மன்னர் முடிதுறப்பது இதுவே முதல் முறை ஆகும். தென்கிழக்கு ஆசிய கண்டத்தில் அமைந்துள்ள மலேசியா நாட்டில் மன்னரின் முடியாட்சியின் கீழ் கூட்டாட்சி முறையிலான அரசியல் சட்டம் அமலிலுள்ளது.

அந்நாட்டின் 15ஆம் மன்னராக பொறுப்பு வகிக்கும் சுல்தான் முஹம்மது தலைமையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் மகாதீர் பின் முகம்மது, துணைப் பிரதமர் வான் அசிசா வான் இஸ்மாயில் ஆகியோர் அந்நாட்டின் ஆட்சியை நடத்தி, நிர்வகித்து வருகின்றனர். மலேசியா மன்னராக கடந்த 2016ஆம் ஆண்டு டிசெம்பர் பதவியேற்ற சுல்தான் முஹம்மது 'மன்னர் ஐந்தாம் முஹம்மது' என்று அந்நாட்டவர்களால் அழைக்கப்பட்டுள்ளார்.



உடல்நலக்குறைவுக்காக சிகிச்சை மேற்கொள்ளப் போவதாகக் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மன்னர் விடுப்பு எடுத்திருந்தார். அதன் பின்னர், ரஷ்யாவை சேர்ந்த முன்னாள் 'மாஸ்கோ அழகி' பட்டம் பெற்ற இருபெண்ணை அவர் காதலித்து திருமணம் செய்து கொண்டதாக செய்திகள் வெளியாகின. ஆனால், இந்த வதந்திகள் தொடர்பாக மன்னரின் அரண்மனை வட்டாரங்கள் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில், மலேசியாவிலுள்ள இஸ்லாமிய மத தலைவர்கள் அண்மையில் ஒன்றுகூடி மன்னரைப் பற்றி வெளியான தகவல்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், மன்னர் 5 ஆம் முஹம்மது நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்ததாக மலேசியா நாட்டு மன்னர் அரண்மனை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. அவரது பதவி விலகலுக்கான காரணம் தொடர்பாக அந்த அறிவிப்பில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. 'மாஸ்கோ அழகி' தொடர்பாக முன்னர் வெளியான தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் இந்த இராஜினாமா அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# சு.கவுக்கு எதிராகச் சூழ்ச்சி! சந்திரிகாவை விரட்டுவோம்

## எஸ்.பி.எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து சூழ்ச்சியில் ஈடுபடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து விரட்டப் போவதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.





கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு மூளையில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக தற்போது பல்வேறு கதைகளைப் பேசி வருகிறார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து வரலாற்றில் மிகப் பெரிய கூட்டணி அடுத்த சில தினங்களில் உருவாக்கப்படும்.

இதற்கான இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன எனவும் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# தந்தை வழியில் நாட்டு மக்களுக்காக நான் முழுமூச்சாகப் பணியாற்றுவேன்

## அமைச்சர் சஜித் வாக்குறுதி

(வாழைச்சேனை)



பாராளுமன்றத்தில்பெரும்பான்மை இல்லாமல் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் அரசியல்யாப்பினை புறந்தள்ளிவிட்டு ஜனநாயகத்தை குப்பைக் கூடையில் போட்டுவிட்டு திருட்டு வழியில் ஆட்சியைப் பிடிக்க வந்தவர்களை ஜனநாயக வழியில் நாங்கள் துரத்தியடித்துவிட்டோம் என வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கும்புறுமூலை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 148 ஆவது மாதிரிக் கிராமமான பழமுதிர்ச்சோலை வீடமைப்புத் திட்டத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் இந்த நாட்டை சூறையாடியவர்கள் ஒரு குறுகிய காலத்திற்குள் திருட்டு வழியில் பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டு திருட்டுத்தனமான அமைச்சுக்களை உருவாக்கி விட்டு மீண்டுமொருமுறை நாட்டைச் சூறையாடத் தயாரானார்கள்.

அந்தத் திருடர் கூட்டத்தை ஜனநாயக வழியில் மக்களின் செல்வாக்கு மூலம் நாங்கள் துரத்தி விட்டோம்.

எமது அரசாங்கம் திருட்டுத்தனமான ஒப்பந்தங்களைச் செய்துள்ளதாகத் திருட்டுத்தனமாக ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தவர்கள் தற்போது கூறி வருகிறார்கள்.

நாங்கள் எப்போதும் மக்களின் நலன் சார்ந்து ஒப்பந்தங்களைச் செய்து அவர்களின் நலன் சார்ந்து சிந்திப்பவர்கள். வீதிகளைப் புனரமைப்பது, கடற்றொழிலாளர்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்தவும் விவசாயிகளை மேன்மையடையச் செய்ய வேண்டும் என்பதற்காக மக்கள் மத்தில் சென்று ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கத்தை தோற்கடிப்பதற்காக சிலர் நிதி மோசடி, பதவி மோசடி, அபிவிருத்தி மோசடி ஒப்பந்தங்களைச் செய்தார்கள். அவர்கள் சொந்தக் குடும்பங்களின் வயிறுகளை வளர்ப்பதற்காகவும் ஒப்பந்தங்களைச் செய்தார்கள். இவர்கள் நாட்டைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

திருட்டு ஒப்பந்தங்களைச் செய்தவர்களை நாட்டின் மக்கள் அடையாளம் கண்டார்கள். அவர்களை மக்களின் சக்தியைப் பயன்படுத்தி ஜனநாயக ரீதியில் ஓரம் தள்ளி அவர்களின் திருட்டு ஒப்பந்தங்களை கிழித்து குப்பையில் போட்டு விட்டோம்.

இந்த மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான யோகேஸ்வரன், சிறிநேசன், இராஜாங்க அமைச்சர்களான அலிஸாஹிர் மௌலானா, அமீர் அலி ஆகியோர் இலஞ்சங்களுக்கு துணை போகாதவர்கள். ஜனநாயகத்தின் பால் அன்பு கொண்டு உறுதியாக இருந்தார்கள். இடையில் உருவாக்கப்பட்ட திருட்டுத்தனமான அரசாங்கத்துடன் இணையாதவர்கள்.

காசுக்கு விலை போகாத மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகளை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் காணப்படக் கூடிய வீட்டுப் பிரச்சினைகளை நூற்றுக்கு நூறு வீதம் நிவர்த்தி செய்து தருவேன்.

எனது தந்தை இந்த நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்து உயிர்த் தியாகம் செய்தவர். அந்த வழியில் நானும் நின்று இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் முழு மூச்சாகப் பணியாற்றுவேன் என அவர் வாக்குறுதியளித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனத்தளர்ச்சியும் நரம்புத் தளர்ச்சியும்

சேர்! கதவை இழுத்துப் பூட்டியதற்குப் பின்னர் பூட்டைத் திரும்பத் திரும்ப இழுத்துப்பார்க்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா? அப்படி என்றால் நான் சொல்கிறேன் என்று வருத்தப்படாதீர்கள். உங்களுக்கு நரம்புத்தளர்ச்சி இருந்தாலும் இருக்கலாம்.

நரம்புத்தளர்ச்சிக்கு இன்னும் சில சில அறிகுறிகள் உண்டு. தொடர்ந்து பல இரவு தூங்க முடியாமல் இருப்பது, கடந்து போனா சீர்கேடுகளை நினைத்துத் தன்னையே வருத்திக்கொண்டு அது எல்லை மீறிப் போகும்போது தன்னம்பிக்கை இழந்து தற்கொலை செய்து கொள்ளலாமா? என்று யோசிப்பது, அர்த்தமில்லாத பயம், எல்லை மீறிய பதற்றநிலை, தினசரி நடவடிக்கையில் ஏற்படும் மாற்றம், ஏதோ ஒன்றைப் பற்றிய மாறாத சிந்தனை, செய்த ஒரு செயலையே திருப்பத் திரும்பச் செய்வது, பூட்டை இழுத்துப் பார்ப்பது போல்! இது நரம்புத் தளர்ச்சியினுடைய அறிகுறிகள்!

நரம்புத் தளர்ச்சி என்பது வேறு! மனத்தளர்ச்சி என்பது வேறு! அது Neurotic, இது Psychotic! இது இரண்டுக்கும் சேர்ந்து ஒரே பெயர். Psycho -neurosis.

நரம்புத்தளர்ச்சிக்கும் மனத்தளர்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். நரம்புத்தளர்ச்சி உள்ளவன் கற்பனையில் கோட்டை கட்டுபவன். ஆனால் மனத்தளர்ச்சி உள்ளவன் கோட்டை கட்டுவதோடு இருக்காமல் அதிலேயே வசித்துக்கொண்டு வருபவன்.

பொதுவாக நரம்புத்தளர்ச்சி உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியோ, மனநிறைவோ இருப்பதில்லை! ஆனால் அவர்கள் பிரச்சினையை அவர்கள் முழுமையாக உணர்வது உண்டு. அதற்காக சிகிச்சை எடுப்பதும் உண்டு. நரம்புத்தளர்ச்சி உள்ள ஒருத்தனுக்கு (Neurotic) முக்கியமான பிரச்சினை என்னென்ன...

சராசரி மனிதர்களில் தானும் ஒருத்தராக வாழுவதா? அல்லது அவர்களில் இருந்து மாறுபட்டு இருப்பதா?என்பது தான்!

ஆனால் மனநோய் உள்ளவன் (Psychotic) ஆபத்தானவன். அவனுக்கு தன்னுடைய சூழ்நிலையைப் பற்றிய சிந்தனை அறவே இருப்பதில்லை! இவர்கள் எல்லாம் தங்களைப் பெரிய ராஜாக்கள் என்று நினைத்துக்கொள்வது மட்டுமில்லை. எதிரிகளால் தாக்கப்படும் பேராபத்தில் சூழ்ந்து இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்வார்கள்.

இருந்தாலும் நரம்புத்தளர்ச்சிக்கும் மனத்தளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு ஒரு நூலிழை அளவு தான்! நரம்புத்தளர்ச்சிக்குப் பல சிகிச்சை முறைகள் உண்டு. நரம்புத்தளர்ச்சியின் பிரிவு, அது உண்டான காரணம், தாக்கப்பட்டிருக்கும் அளவு இதைப் பொறுத்து சிகிச்சை கொடுக்க வேண்டும்.

பொதுவாக மூன்று வகையான சிகிச்சைகளைத்தான் அதிகமாக எல்லோரும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். Chemotherapy-மருந்து சிகிச்சை, Physiological Methods– உடலில் நேரடியான சிகிச்சை Psychotherapy.

மருந்துகள் மூலமாகக் கொடுக்கப்படும் சிகிச்சை தான் கீமோதெரபி! இது தான் மனநோய் மருத்துவத்தில் முதற்படி... இந்த மருந்து எல்லாம் அதனுடைய வீரியத்தைப் பொறுத்து வித்தியாசப்படும். சிலது மயக்க நிலையை ஏற்படுத்தும்–Sedatives, சிலது தூக்கத்தை வரவழைக்கும்–Tranquilizers, சிலது உணர்ச்சிகளைத் தூண்டும்–Stimulants, சிலது மனதுக்கு அமைதி கொடுக்கும்–Antidepressauts இப்படிப் பலவகை.

ஒரு குறிப்பிட்ட நோயாளிக்குக் குறிப்பிட்ட வகை மருந்துதான் பயன் கொடுக்கும். அதனால் மருத்துவ ஆலோசனை இந்த வகை சிகிச்சைக்கு ரொம்பவும் அவசியம். இதைத்தவிர, மின் அதிர்வு சிகிச்சை இருக்கிறது–Electro convulsive therapy (ECT).

நரம்பு அறுவைச் சிகிச்சை இருக்கிறது–Neuro surgery. மின் அதிர்வு சிகிச்சையில் 200 மில்லி ஆம்ஸ், 100 வோல்ட் உள்ள மின்சாரத்தை ஒரு விநாடிக்குச் செலுத்துவார்கள். சில நேரங்களில் இந்த மின்சாரம் மூளையுடன் ஒரு பகுதிக்கு மட்டும் செலுத்துவார்கள். இந்த வகையில் சிகிச்சை செய்யும் போது துணை விளைவாக அம்னீஷியாக் குழப்பம் இது எல்லாம் ஏற்பட்டால் கூட விரைவில் அது எல்லாம் மறைந்துவிடும்.

நரம்பு அறுவைச் சிகிச்சையில் 'லோபோடமி (Lohotomy) என்னும் சத்திரசிகிச்சை செய்வார்கள். இதில் என்ன செய்வார்கள் என்றால், மூளையையும் மூளையினுடைய முன்பகுதியையும் (Frontal Lobes) இணைக்கும் நரம்பு நார்களை (Connective nerve fibers) துண்டித்துவிடுவார்கள்.

இது எல்லாம் நோய் முற்றிய நிலையில் கடைசியாகத்தான் செய்வார்கள்! அடுத்தது 'ஸைக்கோ தெரபி'! நரம்புத்தளர்ச்சிக்கு ஆணிவேர் குழப்பமும் பதற்றமும் தான். இது பெரும்பாலும் உள் மனதில் புதைந்து இருக்கும் நேரடி மருந்து சிகிச்சையும் மின்அதிர்வு சிகிச்சையும் உடனடியாக நிவாரணம் கொடுத்தால் கூட நீண்டகால நிவாரணம் 'ஸைக்கோ தெரபி' இல் தான் கிடைக்கும்.


இந்த முறை எப்படி என்றால், தேர்ச்சி பெற்ற மனநோய் நிபுணர்கள் நோயாளி மனதை ஊடுருவிப் பார்க்க முயற்சி செய்கிறார்கள். நோயாளிகளை அவர்கள் நினைப்பதை கூச்சமில்லாமல் சொல்வது போல் சொல்லத் தூண்டுவார்கள்! அதனால் நோய்க்கான மூலகாரணம் தெரியும். அதற்குப் பாரிகாரம் தேடுவதும் சுலபம்.

யாராக இருந்தாலும் சரி... தன்னுடைய குறையை நினைத்து வெட்கமோ துக்கமோ பட வேண்டியதில்லை! ஆரம்பத்திலேயே கவனித்து விட்டால் அதிகமாக ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை!

ஒரு ராஜா இருந்தார். தன்னுடைய தேசத்தில் மன நோயாளிகளுக்காகத் தனியாக வைத்தியசாலை எல்லாம் கட்டிக்கொடுத்தார். ஒரு நாள் ராஜா தன்னுடைய பரிவாரங்களுடன் அந்த வைத்தியசாலையைப் பார்வையிடுவதற்காகப் போயிருந்தார். அங்கேயிருந்த ஒருத்தர் ராஜாவையே பார்த்து "நீ...யார்...?" என்று கேட்டு விட்டார். ராஜாவுக்கு ரொம்ப அவமானமாகப் போய் விட்டது...

"என்னப்பா... என்னையே பார்த்து நீ யார் என்று கேட்கிறாய்! உனக்கு எவ்வளவு துணிச்சல்! நான் இந்த நாட்டுக்கே அரசன்! தெரியுமா?" என்றார் பெருமையாக! அதுக்கு அந்த ஆள், "நான் கூட இங்கே வந்த புதுசில் அப்படித் தான் சொல்லிக்கொண்டிருந்தேன்... கவலைப்படாதே போகப்போகச் சரியாய் போய்விடும்!" என்றாராம்.

# புத்தாண்டுப் பலன்கள் -2019



பிறர் செய்யும் குற்றம் குறைகளை அச்சமின்றி எடுத்துரைக்கும் தனுசு இராசி வாசகர்களே!

புத்தாண்டு புகழ்மிக்க ஆண்டாக அமையப் போகின்றது. இத்தனை நாட்களாக நீங்கள் பட்ட துயரங்கள் இப்பொழுது விடைபெறப்போகின்றது. அயராத முயற்சிக்கும் உங்களின் அறிவுக் கூர்மைக்கும் தளராத மனதிற்கும் தன்னம்பிக்கைக்கும் முக்கியத்துவம் கிடைக்கும் நேரமிது. எனவே சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

நீங்கள் பிடிவாத குணத்திற்குச் சொந்தக்காரர்கள். உங்கள் மனதில் தோன்றிய கருத்துகளை மாற்றுவது என்பது இயலாத காரியம். அதேசமயம் பாசத்தால் குருவால் பார்க்கப்படுகின்றார். எனவே தாய்வழி உறவில் மகிழ்ச்சி ஏற்படும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெறுவீர்கள். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஊர் மாற்றங்கள், இலாகா மாற்றங்கள் விரும்பியபடியே அமையும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். முன்னோர் வழிச் சொத்துக்களில் ஏதேனும் ஒன்று இரண்டை விற்கும் சூழ்நிலை உருவாகலாம். அதன்படி கிடைக்கும் தொகையைக் கொண்டு தொழிலுக்கு மூலதனமாக்கி வளர்ச்சியைக் கூட்டிக் கொள்வீர்கள்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் ராகு சஞ்சரிக்கின்றார். மகரத்தில் கேது சஞ்சரிக்கின்றார். பெப்ரவரி 13 ஆம் திகதி பின்னோக்கிச் சென்று மிதுனத்தில் ராகுவும், உங்கள் இராசியான தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக பொருளாதார நிலையில் திடீர் திடீர் என தனலாபமும் வரலாம். தொழில் மாற்றுச் சிந்தனைகள் உருவாகும். பணியிடங்கள் நன்மை தரும். பல நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, பணி நிரந்தரம், சம்பளப் பாக்கிகள் வசூலாகுதல் போன்றவைகள் இக்காலத்தில் நடைபெறலாம்.

ராகு சஞ்சரிப்பது புதன் வீடாகும். எனவே மாமன் மைத்துனர் வழியில் யங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் அனைத்தும் விலகி ஓடும். பட்டி தொட்டியெல்லாம் உங்கள் புகழ் பரவ வாய்ப்புக் கிட்டும். முன்னேற்றம் கூடும். வம்பு, வழக்குகளில் இருந்து விடுபடுவீர்கள். தொழில் வெற்றி நடை போடும். அரசு வழியிலும் ஆதாயம் கிடைக்கும்.

தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவானின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றது. முத்தான பலன்களை உங்களுக்கு வழங்கப் போகின்றது. குறிப்பாக உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விருப்ப ஓய்வில் வந்து சுயதொழில் செய்யும் வாய்ப்பு வரும். புதிய உத்திகளைக் கையாண்டு நவீன தொழில்நுட்பங்களை அறிந்து வைத்திருக்கும் நபர்களை பங்குதாரர்களாக்கி இலாபம் குவிக்க முன்வருவீர்கள்.

பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள்




குறிப்பாக குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் மட்டுமே வெற்றி பெற இயலும்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை புதிய பாதை புலப்படும் காலமாகும். காரணம் ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். தங்கம், வெள்ளி, ஆடை வாங்கும் யோகம் கிட்டும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் உண்டு. சலுகைகளும் கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம், வீடு கட்டும் யோகம் போன்றவைகளும் செயற்படும் நேரமிது.

வளர்ச்சி தரும் வழிபாடு

பிரதோஷ நேரத்தில் விரதமிருந்து நந்தியெம்பெருமானை வழிபடுவதோடு நந்திக்குரிய பதிகம் பாடுவது நல்லது. நாமக்கல் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவதன் மூலம் சேமிப்பு உயரும், செல்வாக்கும் அதிகரிக்கும்.

சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் பணப்புழக்கத்தில் தடை ஏற்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. பற்றாக்குறை அதிகரிக்கும். சேமிப்புக் கரையும். கலந்தாலோசித்து எடுக்கும் முடிவே காரிய வெற்றியை ஏற்படுத்தும். எல்லை மீறிப் பழகியவர்களால் தொல்லை ஏற்படும் நேரமிது. உடன்பிறப்புகளே எதிரிகள் ஆகலாம். உயரதிகாரிகள் சலுகை தர மறுக்கலாம். வீண் அலைச்சல்களும் விரயங்களும் ஏற்படும்.

## அஷ்டமத்து ராகுவின் பெயர்ச்சியால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் கைகூடும்

திறும் கட்டுப்பட்டவர்கள். உதவிகள் செய்வதன் மூலமே உள்ளத்தில் இடம் பிடித்து விடுவீர்கள். சாதனைகள் நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெற வேண்டும் என்ற எண்ணம் இளமை காலத்திலிருந்தே உங்கள் மனதில் இடம் பிடிக்கும்.

புத்தாண்டின் தொடக்க நிலை

ஆண்டின் தொடக்கம் உங்கள் இராசிநாதன் குருபகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே விரயங்கள் உங்களுக்கு அதிகரிக்கும். இருப்பினும் 3 மாதம் கழித்து அதிசார குருவாக மாறி மார்ச் 13 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். ஒக்டோபர் 28 ஆம் திகதி குரு பகவான் வலிமை பெற்று உங்கள் இராசிக்கு பெயர்ச்சியாகி வருகின்றார். அங்ஙனம் வரும்பொழுது அற்புதமான பலன்களை அள்ளி வழங்குவார்.

வருடத் தொடக்கத்தில் குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. இதன் விளைவாக சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரும். தாய்வழி ஆதரவோடு தகுந்த நற்பலன்களைப் பெறுவீர்கள். வீடு வாங்கும் யோகம் உண்டு. புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பும் கிட்டும். ஆரோக்கியத் தொல்லை அகலும்.

ஒரு சிலருக்கு பணிபுரியும் இடத்தில் தொல்லைகள் இருக்கலாம். 6 ஆம் இடத்தினைக் குரு பார்ப்பதால் உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் ஏதேனும் முயற்சிகள் எடுத்தால் அதில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். 8 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 4 ஆம் இடத்தில் பலம் மங்கல நிகழ்வு நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளி நாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முன்வருவீர்கள். திருமண முயற்சிகள் கைகூடும்.

ஞானகாரகன் என்று வர்ணிக்கப்படும் கேது ஜென்மத்தில் சஞ்சரிக்கப் போவதால் நாக தரிசனம் உங்களுக்கு கிடைக்கும். தீர்த்த யாத்திரைகளும் ஸ்தலங்களுக்கு சென்று பரிகாரம் செய்யும் வாய்ப்பும் உண்டு. தேக நலன் சீராகும். வீண் பழிகளில் இருந்து விடுபட ராகு-கேதுக்களுக்கு உரிய பிரீதிகளைச் செய்வது நல்லது. இக்காலத்தில் வேலை கிடைக்காத பிள்ளைகளுக்கு வேலை, மாலை கிடைக்காத பிள்ளைகளுக்கு மாலை கிடைக்கும்.

ஜென்மத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது தாழ்வு மனப்பான்மை அதிகரிக்கும். தடைகள் வந்து கொண்டே இருக்கும் என்பது பொது நியதி. ஆனால் உங்களைப் பொறுத்தவரை இப்பொழுது பெயர்ச்சியாகும் கேது சுபக்கிரகம் என்று வர்ணிக்கப்படும் குருவின் வீட்டில் அல்லவா சஞ்சரிக்கின்றார். எனவே எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. எதிர்மறைச் சிந்தனைகளை நேர்மறைச் சிந்தனைகளாக்கிக் கொள்ளுங்கள். இது போன்ற காலங்களில் ஞானகாரகன் கேதுவிற்குரிய சிறப்பு வழிபாடுகளையும் வடக்கு நோக்கிய விநாயகர், வராகி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. குரு உங்கள் இராசிநாதனாகவும் 4 இற்கு அதிபதியாகவும் விளங்குபவர். இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது உங்கள் ஜென்ம இராசிக்கு வருகின்றார். இராசிநாதன் இராசியில் சஞ்சரிப்பது யோகம் தான். தொட்ட காரியம் நனவாகும். முன்னோர்கள் செய்த முறையான தர்மத்தை தொடர்ந்து செய்ய முன்வருவீர்கள். அவர்கள் கட்டிவைத்த கோவிலின் பாரமரிப்புச் செலவுகளை கூட ஏற்றுக்கொள்ள முன்வருவீர்கள். பெற்றோர்களின் உறவில் இருந்த விரிசல் அகலும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். குடும்பத்தில் அமைதி கூடும். எதிரிகள் விலகி இனிய பலன் கிடைக்கும்.

குருவின் அதிசாரமும் வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிரமாகவும் இருக்கின்றார். எனவே இக்காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனத்தோடு இருப்பது நல்லது. உறவினர் பகை உருவாகலாம். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களின் எண்ணிக்கை கூடும். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லையால் அதிக கவலை கொள்வீர்கள். சேமிப்புகள் கரையும். பணியாளர்கள் உங்களை விட்டு விலக நேரிடும். பொதுவாழ்வில் இருப்பவர்களின் வழக்குகளை சந்திக்க நேரிடும். மிகமிக கவனத்தோடு இருப்பது நல்லது.

கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை செவ்வாய், சனி பார்வை இருக்கின்றது. மிதுனச் செவ்வாயை தனுசு சனி பார்க்கின்றது. எனவே இனம்புரியாத கவலை வந்து சேரும். எந்த முயற்சி செய்தாலும் தடை ஏற்படுகின்றதே என்று நினைப்பீர்கள்.

பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது. வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஆர்வம் காட்ட இயலாது. வழிபாட்டிலும் கவனம் செலுத்த முடியாது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு பொருளாதார நிலை உயரும் ஆண்டாக அமையப் போகின்றது. இராசிநாதன் செவ்வாயைக் குரு பார்ப்பதன் மூலமும் குரு மங்கள யோகத்தையும் சூரியன் புதனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்கும் விதத்தில் ஆண்டு தொடங்குவதால் மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். தாய்வழி ஆதரவும், சகோதர ஒத்துழைப்பும் திருப்திகரமாக அமையும். பெப்ரவரி மாதம் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு வாழ்க்கைத் துணையோடு ஏற்பட்ட பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். சொத்துக்கள் வாங்கும் யோகமும், கிரகப்பிரவேசம் நடத்தும் வாய்ப்பும் உண்டு. கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் மாறி ஒற்றுமை புலப்படும். தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும். தடைபட்ட பதவி உயர்வு தானாகக் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், குருபகவான் வழிபாடும் ராகு-கேது பிரீதியும் நலங்களையும், வளங்களையும் வரவழைத்துக்கொடுக்கும்.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# பாலத்திலிருந்து குதித்த சிறுமி சடலமாக மீட்பு

(கல்லடி)

மட்டக்களப்பு. கல்லடி பாலத்திலிருந்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொள்ள முயன்ற 16 வயது சிறுமியின் சடலம் நேற்றுத் திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க காரியாலயத்திற்கருகிலுள்ள ஆற்றில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற 16 வயது சிறுமியைக் காப்பாற்ற இளைஞர் ஒருவர் ஆற்றில் குதித்தபோதும் குறித்த சிறுமியைக் காப்பாற்ற முடியாமல் போனது.

இதனையடுத்து குறித்த சிறுமியின் சடலத்தை ஆற்றில் தேடிவந்த நிலையிலேயே இந்த சடலம் ஆற்றில் கரை ஒதுங்கிய நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா பூநொச்சிமுனையைச் சேர்ந்த 16 வயது சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

# 9 வயதுச் சிறுமியை கொலை செய்து புதைத்த தாய் உட்பட இருவர் கைது



(பதுளை)

9வயதுசிறுமியைகொலை செய்து புதைத்ததாக தாய் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை ஹாலிஎல - கன்தேகெதர சார்ணியா தோட்டம் மஹதென்ன பிரிவில் சிறுமியொருவர் அவரின் வீட்டுக்கு அருகில் மரக்கறித் தோட்டத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த இருவரும் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 26 மற்றும் 30 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளத்தை சேர்ந்த குறித்த சிறுமியின் தாய் அவரது கணவனைப் பிரிந்து ஹாலிஎல பகுதியில் வசித்து வந்துள்ளார்.

குறித்த சிறுமி, தாயின் தங்கையிடம் வளர்வதாகவும், 5 வருடங்களுக்கு முன்பு சிறுமியைத் தங்கையிடம் ஒப்படைத்து விட்டதாகவும் குறித்த தாய் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# சப்ரகமுவ பல்கலை.மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் உள்ளீர்ப்பை அதிகரிக்கக் கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக கொழும்பு - வோட் பிளேஸ் பகுதியைச் சுற்றியுள்ள வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் சிலவற்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதை குறைத்துக் கொண்டுள்ளமை உள்ளிட்ட சில விடயங்களை முன்வைத்து நேற்றுக் காலை இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொழும்பில் வாகன நெரிசல்!



# ஜனாதிபதியைக் கொல்லச் சதி நாமல் குமாரவின் மீது விரைவில் விசாரணை

## இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்களை படுகொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய நாமல் குமார இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்படவுள்ளார்.




நாமல் குமார 2009 ஆம் ஆண்டு விமானப்படையில் இணைந்து கொண்டு பயிற்சியின் போது தப்பிச் சென்றவர் என்றும். பின்னர் 2011 ஆம் ஆண்டில் இராணுவத்தில் இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த போது தப்பிச் சென்றார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோட்டே நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

அத்துடன், இராணுவத்தில் இணைந்து கொண்ட போது அவர் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ் போலியானது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந் நிலையில், இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் மீது எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கை நாமல் குமாரவுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவருக்கு எதிராக நடத்தி வரும் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர், இராணுவ விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு. அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சமையல் பொருட்கள் கொள்வனவில் நிதி மோசடி குற்றச்சாட்டில் சிக்கிய பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் திணைக்கள பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில், தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையத்தின் சமையல் பகுதிக்கு பொறுப்பாகவிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், சமையலுக்கான பொருட்களை கொள்வனவு செய்யும் இடங்களில் கடனாக பொருட்களை கொள்வனவு செய்து. அதற்கான பணத்தை செலுத்தியதாகக் கூறி பொலிஸ் நிலைய பணத்தை கையாடி வந்துள்ளார்.

இதனையடுத்து கடனாக சமையல் பொருட்களை வியாபாரம் செய்த வியாபார நிலைய உரிமையாளர், பணம் செலுத்தவில்லை என உயர் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து, சமையல் பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணத்தை கையாடி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்பிரகாரம் அவரை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிறந்த நாளைக் கொண்டாட கடலுக்குச் சென்றவர் மரணம்

(ஏறாவூர்)

ஏறாவூர் - பாலையடித் தோணா கடலில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்ட குறித்த நபரின் சடலம், சந்திவெளி கிராமத்தை வசிப்பிடமாகக்கொண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவருடையது என நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட சடலம் வரதராஜன் ருஷான் (வயது-24) என்பவருடையது என அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார். கடந்த சனிக்கிழமை தனது 24 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய குறித்த நபர். நேற்று முன்தினம் மாலை தனது மனைவி மற்றும் உறவினர்களை அழைத்துக்கொண்டு பாலையடித்தோணா கடற்கரைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது இவரும், உறவினர்கள் சிலரும் கடலில் நீராடிய போது கடல் அலையில் அள்ளுண்டு குறித்த நபர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

உறவினர்களும் மீனவர்களுமாகச் சேர்ந்து கடலில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எனினும் உயிரிழந்தவரின் சடலத்தை மாத்திரமே கண்டெடுக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# எனது கருத்து தவறானாலும் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## பந்துல உறுதி




(புஞ்சிபொறளை)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் தான் தெரிவித்திருக்கும் கருத்துத் தவறாக இருந்தாலும்,

அதே நிலைப்பாட்டில் தான் தொடர்ந்திருப்பதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி பந்துல குணவர்த்தன, சர்வதேச பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகளை மேற்பார்வை செய்யக்கூடாது எனவும் தெரிவித்தார்.

புஞ்சி பொறளையிலுள்ள வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் அண்மையில் நான் தெரிவித்திருந்த கருத்துக்கு கல்வி அமைச்சரால் என்மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன என்று தெரிவித்த அவர், முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும், பிரதி அமைச்சர் பாலித தெவரபெருமவும் சண்டையிட்டுக்கொள்வதைப் போல, கல்வி அமைச்சருடன் நான் சண்டையிட்டுக்கொள்ளப் போவதில்லை.

அரசாங்கப் பாடசாலை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளே முதலிடம் பெறவேண்டும். சர்வதேச பாடசாலை மாணவர்களின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன், அரசாங்கப் பாடசாலை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை ஒன்றிணைத்து வெளியிடக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காலியில் இந்திய ஆய்வுக் கப்பல்

(காலி)

சமுத்திரவியல் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டு, இந்தியக் கடற்படையின் ஆய்வுக் கப்பலான ஐ.என்.எஸ்.ஜமுனா காலி துறைமுகத்தை சென்றடைந்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இந்த ஆய்வுக்கப்பல் கடந்த ஆண்டு டிசெம்பர் 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.



கொழும்பு தொடக்கம் காலி வரையான கடற்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், இந்தக் கப்பல் காலி துறைமுகத்தை அடைந்தது.


இதையடுத்து. இலங்கை-இந்தியக் கடற்படை அதிகாரிகள் காலி கடற்படைத் தளத்தில், இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

139



“அமெரிக்கன் மிஷனரிமாரின் பிரயாசத்தினால் 1849 அளவில் 680 பேர் புதிதாக மதம் மாறியிருந்தனர். இவர்களில் 480 பேர் ஆண்களாவர். இவர்களில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் வட்டுக்கோட்டை செமினரியிலும் ஏறத்தாழ 180 பேர் உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலையிலும் கற்பிக்கப்பட்டனர்”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

சிறையில் நடைபெற்ற ஆராதனைகள் சகோதரர் ஓ நெயிலினால் (O'Neill) அவர்களது நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளன (இது சுண்டுக்குளி மாவட்டத்தில் உள்ளது). வினாவிடை ஆசிரியர் மார்க் (Mark) இதற்குப் பொறுப்பாக உள்ளார்.

ஞாயிறு மாலை 2 மணி ஆராதனைக்கு இவர் ஒழுங்காகச் சென்றிருந்தார். அங்கு வரும் சபையினர் பொதுவாக சிரத்தையும் ஆர்வமும் உள்ளவர்களாக இருந்தனர். வருகை தருபவர்களின் எண்ணிக்கை சராசரி முப்பத்தைந்திலிருந்து நாற்பதாகும்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் அயல் கிராமங்களிலும் வன்னிப் பிரதேசத்தின் மூலை முடுக்குகளிலும் தமிழ் மக்களிடையில் தமது மதத்தைப் பரப்ப மிஷனரிமார் கடுமையாக உழைத்தனர் என நாம் இந்த அறிக்கைகளிலிருந்து முடிவுக்கு வரலாம்.

### அமெரிக்கன் சிலோன் மிஷன் (The American Ceylon Mission)

மிஷனரிகளுள் மிக முக்கியமானதாகக் கருதப்படும் அமெரிக்கன் சிலோன் மிஷன் (ஏசிஎம்), வொரன் (Warren), றிச்சட்ஸ் (Richards), மெய்க்ஸ் (Meigs), புவர் (Poor) என்ற போதகர்களினால் 1816 இல் தாபிக்கப்பட்டது. பிரித்தானிய ஆட்சியின் போது அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்த ஒரே மிஷன் இதுவாகும்.

ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கன் சிலோன் மிஷன் தனது செயற்பாடுகளை, பிரத்தியேகமாக யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே மேற்கொண்டது. மதம், கல்வி என்பவற்றுடன் மருத்துவசேவை, அச்சுத்தொழில் என்பவை இச்செயற்பாடுகளாகும்.

1819 இன் இறுதியில் ஒரு தொகுதி அமெரிக்கன் மிஷனரிமார் வந்ததுடன் அவர்களைத் தொடர்ந்து 1833–1834 காலத்தில் இன்னுமோர் தொகுதியினர் வந்திருந்தனர். இவர்களில் அதிகாரம் பெற்ற ஆறு மிஷனரிமார், ஒரு வைத்தியர், ஒரு அச்சிடுபவர் என்போர் இருந்தனர்.

அந்தக் காலத்திலிருந்து 7 முதல் 9 அதிகாரம் பெற்ற மிஷனரிமாரும் வைத்தியர் ஒருவரும் அச்சிடுபவர் ஒருவரும் மிஷனில் இருந்தனர்.

பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலத்தில் மிஷனுடைய மேற்பார்வையின் கீழ் தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, வறணி, உடுப்பிட்டி ஆகிய இடங்களில் எட்டு நிலையங்கள் இருந்தன. இவற்றைவிட வெளியூர்களில் அச்சுவேலி, மூளாய், காரைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு போன்ற இடங்களில் ஆறு நிலையங்கள் இருந்தன.

எப்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் சுவிசேஷத்தைப் போதிப்பதே அமெரிக்கன் சிலோன் மிஷனின் நோக்கமாக இருந்தது. மத ஆராதனைகள் ஒவ்வொரு நிலையத்திலும் ஒழுங்காக நடத்தப்பட்டன.

சில கிராமங்களில் வாரத்தில் இரண்டு, மூன்று தடவை சமயக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மிஷனரிமார் தனிப்பட்டவர்களுடனும் குழுக்களுடனும் தங்கள் இல்லங்களிலும் வீதிகளிலும் கூட சம்பிரதாயமற்ற வகையில் பிரசங்கம் செய்தனர். கிறிஸ்தவக் கொள்கைகளைச் சிறுவர், சிறுமியர் இருபாலாருக்கும் போதிப்பது இவர்களது வேறொரு பிரதானமான நோக்கமாக இருந்தது.

பொதுப்பாடசாலைகளிலும் தேர்ந்தெடுத்த சிறுவர்களுக்கு செமினரிகளிலும் சிறுமிகளுக்கு விடுதிப் பாடசாலைகளிலும் ஆழமான கல்வி அளிக்கப்பட்டது. வேதநூல்கள், சிறு பிரசுரங்கள், பாடசாலைப் புத்தகங்கள் என்பன உள்ளூர் மொழியில் மீள்பதிப்புச் செய்யப் பட்டு மாவட்டம் முழுவதிலும் விநியோகிக்கப்பட்டன.

இந்த வேலைகளில் மிஷனரிமாருக்கு உதவுவதற்காக உபதேசிமார் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இந்த வகையில் 1849 இல் மிஷனில் இருபது பேர் வேலையில் இருந்தனர்.

வேதாகமமே எல்லாக் கற்பித்தலுக்கும் மையமாக இருந்ததுடன் ஒழுக்கம், மதம் என்பவற்றில் அதியுயர் அதிகாரம் கொண்டிருந்தது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர் பொது வழிபாடுகளில் பங்குபற்றுவதுடன் ஏனைய வழமையான சபைச் செயற்பாடுகளிலும் கலந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர்.

அமெரிக்கன் மிஷனரிமாரின் பிரயாசத்தினால் 1849 அளவில் 680 பேர் புதிதாக மதம் மாறியிருந்தனர். இவர்களில் 480 பேர் ஆண்களாவர். இவர்களில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் வட்டுக்கோட்டை செமினரியிலும் ஏறத்தாழ 180 பேர் உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலையிலும் கற்பிக்கப்பட்டனர்.

மக்களை மதம் மாற்றுவதிலும் கிறிஸ்தவத்தைப் பரப்புவதிலும் மிஷனரிமார் பயனளிக்கும் வகையில் செயற்பட்டது மாத்திரமன்றி தங்களது நோக்கங்களை அடையக் கணிசமான அளவு வளங்களையும் செலவு செய்தனர் என்பதை மேற்படி புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூர்வாசிகளினால் இவர்களுடைய தீவிர அர்ப்பணிப்பைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இந்த நோக்கத்திற்காகவே மிஷனரிமார் இங்கு வந்திருந்தனர். பத்தொன் பதாவது நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியில் இந்த முயற்சிகள் மேலும் அதிகரித்தனவேயன்றிக் குறையவில்லை.

மேற்சொன்னவற்றுடன் மிஷனரி வேலைகளை முன்னெடுப்பதற்காக விசேட முகவர்களாகப் பின்வரும் சங்கங்கள் தாபிக்கப்பட்டன.

யாழ்ப்பாண Friend in Need Society 1840 இல் உள்ளூர் வாசிகளுக்கு மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக நிறுவப்பட்டது. ஒரு பொது வைத்தியசாலையும் மருந்து விநியோகசாலையும் இதைத் தொடர்ந்து நிறுவப்பட்டன.

(தொடரும்)

# விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## அமைச்சர் காமினி விளக்கம்




(கண்டி)

விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றைத் தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தால் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை பாரியளவில் குறைந்தது. இரண்டு வாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இன்று அந்த நிலைமை அப்படியே தலைகீழாவிட்டது. இவர்களின் செயற்பட்டால் நாடு இரண்டு வருடங்கள் பின்னோக்கி சென்றுள்ளது. எவ்வாறாயினும், நாம் எமது செயற்பாடுகளை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வோம். மக்களுக்கு அனைத்தும் தெரியும். அவர்கள் முட்டாள்கள் அல்ல.

இதற்கான பாடத்தை அடுத்த தேர்தல்களில் அவர்கள் வழங்குவார்கள். நாம் ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் ஸ்திரமான நிலையில் இருக்கின்றோம்.

அத்தோடு, விசேட நீதிமன்றங்களை அமைக்க நாம் தீர்மானிக்கவில்லை. மாறாக எங்கு அதிக குற்றங்கள் இடம்பெறுகின்றதோ அங்கு நீதிமன்றங்களை அமைத்து, ஒரு நாளில் வழக்காடத் தான் தீர்மானித்திருந்தோம்.

மாறாக விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எம்.பி.பதவி வெற்றிடத்திற்கு பெயரைப் பரிந்துரைக்கவும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ள, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் வெற்றிடத்திற்கு, தகுதியான ஒருவரின் பெயரை பரிந்துரைக்குமாறு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.


"அதற்கான கடிதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் மகிந்த அமரவீரவுக்கு, அனுப்பிவைக்கப்படும்" என, தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

ஹிஸ்புல்லாவின் இராஜினாமாவை அடுத்து, அந்த எம்.பி. பதவிக்கு வெற்றிடம் நிலவுவதாக, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார்.

"இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரிடமிருந்து பெயர் கிடைத்தவுடன், அந்தப் பெயர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். அதன்பின்னரே எம்.பி. பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்" என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

தன்னுடைய தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்து கொண்ட எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண ஆளுநராக கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் கருஜெயசூரியவுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஐரோப்பிய பாராளுமன்ற சிரேஷ்ட உறுப்பினரும், இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவருமான ஜெப்ரி வேன் ஓர்டன் மற்றும் ஐரோப்பா பாராளுமன்ற உறுப்பினர் வில்லியம் டார்ட்மோர்த் ஆகியோர் நேற்றுமுன்தினம் சபாநாயகர் கரு ஜெயசூரியவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைக்கு முழுமையான ஆதரவு வழங்குவதாக சபாநாயகரிடம் தெரிவித்துள்ளனர். கடந்த காலத்தில்பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பதற்ற நிலைமையினை சிறந்த முறையில் தீர்த்து வைத்தமைக்காக சபாநாயகருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (இ-7)

# ஜனாதிபதியின் பிரத்தியேக செயலராக ஜனக நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரத்தியேகச் செயலாளராக ஜனக ரணவன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளராகக் கடமையாற்றிய எரிக் வீரவர்த்தன பதவி விலகியதையடுத்தே, அவரது வெற்றிடத்துக்கு ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையின் உறுப்பினரான ஜெனக ரணவன நியமிக்கப்பட்டுள்ளார். (இ-7)





## அஸ்வினி

**பார்க்கும் உறவுகள் எல்லாமே உன் சொந்தம் இல்லை... பழகிப் பார் பாதி வேசம் தான்**



## சித்ரா

**அச்சம் இருக்கும் வரை பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாது**



## ஸ்வேதா

**அடுத்தவரை அழிக்க நினைத்தால் முதலில் அழிந்து போவது நீயாகத்தான் இருப்பாய்**



## பவிதா

**சந்தோசம் இருக்கும் இடத்தில் வாழ நினைப்பதைவிட நீ இருக்கும் இடத்தில் சந்தோசத்தை உண்டாக்கு உன் வாழ்க்கையில் நிறைவு இருக்கும்**



## வெண்ணிலா

**ஏமாந்துவிட்டால் ஏங்காதே எதிர்த்து நில்**



## நந்தினி


**வழி இல்லை என்றால் நீயே ஒன்றை உருவாக்கிக்கொள்**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அபகீர்த்திப் பட்டியலிலிருந்து இலங்கையை விலக்கத் திட்டம்

## மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித்



(கொழும்பு)

சட்டவிரோத பணத்தை சட்டபூர்வமாக்குதல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதி வழங்குவதை நிறுத்துவதற்கு சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தாமை போன்ற காரணங்களால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது "அபகீர்த்திப் பட்டியலில்" (Black List) உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கையை இந்த வருடம் நடுப்பகுதியில் அதிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியை விநியோகித்தல் ஆகியவற்றுக்கு எதிராக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள், கண்காணிப்பு மற்றும் அது தொடர்பிலான சட்டம் மற்றும் நியதிகளை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையை அபகீர்த்திப் பட்டியலிலிருந்து விலக்கிக் கொள்ள முடியுமென்றும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிதி தொடர்பான செயலணியால் எமது நாடு அபகீர்த்திப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டது. சர்வதேச ரீதியில் அவர்களோடு இணைந்து செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு இலங்கை தவறியதாலேயே அந்நிலை ஏற்பட்டது. இதுபோன்ற சூழ்நிலைகளை தவிர்த்து எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்காணிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிணைமுறி மற்றும் செலாவணி ஆணைக்குழு, காப்புறுதி முகவர் ஆணைக்குழு மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவு இணைந்து கொண்டுள்ளது. இதற்கிணங்க திருட்டு வர்த்தக, கறுப்புப் பண விநியோகம் இடம்பெறும் சூழ்நிலைகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதற்கு மேலதிகமாக நிதி புலனாய்வு சேவையை மேம்படுத்துதல் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொண்டு சாதகமான கொள்கை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மட்டத்தில் இது தொடர்பில் நடைமுறையிலுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறையிலுள்ள கொள்கையை பலப்படுத்துதல், அவற்றை கடுமையாக நடைமுறைப்படுத்துதல் போன்றவை இலங்கை மீதான அபகீர்த்தியை மீள சரி செய்வதற்கு உறுதுணையாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

பாரதி நினைவாக

# கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் கருத்தாடல் களம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் "வித்தகம்" எனும் பெயரில் நடத்தும் கருத்தாடல் களம் நிகழ்வுத் தொடரின் வரிசையில் சிறப்புக் கருத்தரங்கு ஒன்று பாரதி நினைவாக எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய தலைமுறையினரிடையே இலக்கிய தாகத்தை மேம்படுத்தும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவானது, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இவ் விழாவின் கடவுள் வாழ்த்தினை தெ.திருவேரகன் இசைக்கவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையுரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து, புகழ்பெற்ற சொற்பொழிவாளர் கம்பன் கழக நிறுவுநர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களைத் தலைவராகக் கொண்டு இடம்பெறும் "பாரதிநினைவுக் கருத்தரங்கு "பொருள் புதிது" எனும் தலைப்பில் அமையவுள்ளது.

இதில் "ஊருக்கு உழைத்திடல் யோகம்" எனும் பொருளில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் "நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" எனும் பொருளில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்களும் "உளம்பொங்கிலாத அமைதி மெய்ஞ்ஞானம்" எனும்பொருளில் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் அவர்களும் "கவலையற்று இருத்தலேமுக்தி" எனும் பொருளில் வலம்புரி ஆசிரியர் ந. விஜயசுந்தரம் அவர்களும் உரையாற்றவுள்ளனர்.

இவ்விழாவில் கலந்து தமிழ்ச் சுவையைப் பருக அனைவரையும் வருகை தரும்படி கம்பன் கழகத்தினர் வேண்டியுள்ளனர். (இ-7)

# 'கூட்டமைப்பிற்கே முதலமைச்சர்'

(ஏறாவூர்)

கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்புக்கு முதலமைச்சர் பதவியை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்

# சீனக்குடா விமானத் தளத்திலிருந்து நேரடியாக சிங்கப்பூருக்குச் சென்ற விமானத்தால் சர்ச்சை



(திருகோணமலை)

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிலரை ஏற்றி வந்த தனியார் ஜெட் விமானம் ஒன்று, திருகோணமலை, சீனக்குடா விமானத் தளத்தில் இருந்து, அனுமதியின்றி புறப்பட்டுச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனா, சிங்கப்பூர், ஹொங்கொங் நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் சிலர், தனி விமானம் ஒன்றில், கடந்த 3 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்த விமானம், பின்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் திருகோணமலை, சீனக்குடா விமானப்படைத் தளத்தில் தரையிறக்கப்பட்டது.

திருகோணமலையில் முதலீடுகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குழு நேற்று முன்தினம் சீனக்குடா விமானப்படைத் தளத்திலிருந்து, சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றது.

இரண்டாம்உலகப்போருக்குப் பின்னர், சீனக்குடா விமான நிலையத்தில் இருந்து, சிங்கப்பூருக்குப் பயணமான முதல் விமானம் இது வாகும் அதேவேளை, அனைத்துலக விமானப் போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்படாத விமான நிலையம் ஒன்றில் இருந்து, இந்த விமானம் புறப்பட்டுச் சென்றமை குறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

நாட்டின் குடிவரவு, குடியகல்வு சட்டம் மற்றும் சிவில் விமான சேவைகள் சட்டம் ஆகியவற்றின்படி, வெளிநாட்டு விமானம், அனுமதி பெறாத விமான நிலையம் ஒன்றிலிருந்து, நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்ல முடியாது.

அதேவேளை, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக, கப்பல்களுக்கு வழங்கப்படும் அனுமதியைப் பயன்படுத்தியே இந்த விமானம் புறப்பட்டுச் சென்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து வெளிநாடுகளுடன் கலந்துரையாடியது ஏன்?

## சம்பந்தனிடம் விபக்ஷி தேரர் கேள்வி



(கொழும்பு)

நாட்டில் அரசியல் நெருக்கடி நிலவியபோது நீதித்துறை சுயாதீனமாக செயற்பட்டது.

எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் வெளிநாட்டுத் தலையீடுகள் காணப்படாது என சபாநாயகர் தெரிவித்துள்ள போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐரோப்பிய பிரதிநிதிகளுடன் ஏன் கலந்துரையாடினார் என ஹேகொட விபக்ஷி தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மகா சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பு இல- 1 இல் அமைந்துள்ள செமா கட்டடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

வடக்கு- கிழக்கில் காணப்படுகின்ற நீதிமன்றங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மாத்திரமே உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டை உருவாக்கியுள்ளனர். ஏனைய எந்த பிரதேசங்களிலும் அத்தகைய ஏற்பாடுகள் இல்லை. இவ்வாறு சிறிது சிறிதாக பிரிவினை வாதத்தை ஏற்படுத்த முயற்சித்தனர். எனினும் அவர்கள் எதிர்பார்த்த எதுவுமே அவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

எனவே தான் தற்போது அரசியலமைப்பினூடாக நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரச இசை, நாடகப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டக் கலைஞர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான அரச இசை, நாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை நாளை மறுதினம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வரை சமர்ப்பிக்க முடியுமென மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே. கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 180 | 160 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 70 | 65 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 300 | 250 | 400 |
| தக்காளி | 120 | 110 | 120 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 50 | 40 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 100 | 130 | 130 | 110 | 120 |
| பூசணி | 50 | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 120 | 100 | 70 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 55 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 120 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 75 | 80 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 180 | 200 | 120 | 160 | 160 |
| லீக்ஸ் | 180 | 140 | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 200 | 160 | 140 | 70 | 160 |
| கறிமிளகாய் | 250 | 240 | 160 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 600 | 1000 | — | — | 500 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 140 | 130 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 60 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 25-30 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 180 | 140 | 170 | 150 |
| வெங்காயப்பூ | 220 | 260 | 280 | — | 300 |
| முள்ளங்கி | 50 | 60 | 60 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 80 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 100 | 40 | 110 | 80 |

## சிறுவர் அரங்கம்

# உண்மை விளம்பி



சிந்து நதி தீர்த்தத்தில் சச்சிதானந்தா என்ற யோகி ஒரு ஆச்சிரமத்தை ஸ்தாபித்து தன் சிஷ்யர்களோடு வாழ்ந்து வந்தார். அவர் உண்மைதான் தேசத்தை முன்னேறச் செய்யும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்ததால் மக்கள் அவரை "யோகி உண்மை விளம்பி" என வர்ணித்தனர். "மெய் உயர்வைத் தரும். பொய் தாழ்வைத் தரும்' என்பது தான் அவரின் தாரக மந்திரம். ஆகவே, அதையே உபதேசித்தும் வந்தார்.

ஒருசமயம் நதி ஓரத்தில் தன் சிஷ்யர்களோடு செல்லும்போது, ஒருவன் தான் பிடித்த ஆமையைக் கொல்ல அதன் முதுகின் மீது தடியால் அடித்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற யோகி உண்மை விளம்பி அவனைப் பார்த்து, "அன்பனே! ஆமை ஓடு வலுவானது. அதை உடைக்க முடியாது. திருப்பிப் போட்டு அடித்தால் அது உடனே இறந்துவிடும்!" என்றார். அந்த ஆளும் மகிழ்ச்சியோடு செய்து முடித்தான்.

யோகி சொன்னது உண்மையாக இருக்கலாம். ஆனால், ஒரு ஆமையைக் கொன்ற பாவ மூட்டையைச் சுமக்கக் காரணமானார். ஆனால், அதை அவர் உணரத் தவறிவிட்டார்.

மற்றொரு சமயம் உண்மை விளம்பி தன் ஆச்சிரமத்தின் மேடையில் அமர்ந்து கொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே ஒருவன் ஓடிச் சென்றான். சிறிது நேரத்தில் அங்கு சில காவலர்கள் வேகமாக ஓடிவந்தனர். அங்கு யோகியைக் கண்டதும், "சுவாமி! இவ்வழியாக சற்று முன் யாராவது ஓடினார்களா?" என்று வினவினர்.

"ஆம்! சிறிது முன் என் ஆச்சிரமத்தின் வழியாக ஒருவர் ஓடிச் சென்றார்!" என்றார் யோகி.

"நன்றி சுவாமி!" எனக் கூறிவிட்டு அந்த ஆளை எப்படியாவது பிடித்து விடலாமென்று வேகமாகப் பறந்தனர். கொஞ்சத் தூரம் சென்றதும் அந்த ஆளைப் பிடித்துவந்து அரசனுக்கெதிரில் நிறுத்தினர். அரசனும் ஏதும் விசாரிக்காமல் காவலர்களைப் பாராட்டி விட்டு, அந்த ஆளைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

மறுதினம் அரசவையில் அவனை விசாரிக்கக் கொண்டு வந்தனர். காவலர்கள் அவனை துன்புறுத்தியும் தான் கள்வன் அல்ல, எதையும் கொள்ளை அடிக்கவில்லை என வாதாடினான். அரசனும் அவனிடம், "உண்மையைச் சொன்னால் உனக்கு விடுதலை. இல்லையேல் தூக்குத் தண்டனைதான் புரிந்ததா!" என்றார்.

நிரபராதியான அவன், "நான் ஓடி வந்தது உண்மைதான். டாக்டர் அறிவுரைப்படி தினந்தோறும் உடற்பயிற்சிக்காக ஓடுவது வழக்கம். தெரியாமல் ஆச்சிரமத்தின் வழியாக ஓடி வந்ததால் இந்த விபரீதம். கொள்ளை அடித்திருந்தால் மூட்டையோடு ஓடி வந்திருக்க மாட்டேனா? நிரபராதியான என்னைத் துன்புறுத்தியது நியாயமா? ஆனால், உங்களைச் சபிக்க நான் கண்ணகி அல்ல!" எனச் சொல்லி வருந்தினான்.

அப்போது உண்மையான கள்வன் பிடிபட்டான் என அரசனுக்கு செய்தி வந்தது. "நான் நீதி தவறி நடந்து விட்டேனே" என்று வருந்தி இதற்குக் காரணமான காவலர்களைக் கோபித்து, "எக்காரணத்தைக் கொண்டு இவரைக் கைது செய்தீர்கள்?" என்று கேட்டான்.

"அரசே! எங்களை மன்னித்து விடுங்கள். கள்வனைத் தேடிச் சென்றபோது வழியில் ஆச்சிரமத்தில் யோகியைக் கண்டு விசாரித்ததில் அவரும், "ஆம் இவ்வழியே ஒருவன் ஓடியதைப் பார்த்தேன்" என்றார். யோகி உண்மை விளம்பியாச்சே! அவர் சொன்னது சரியே என மேலும் வேகமாகச் சென்று இவரைப் பிடித்து வந்தோம்!" என்றனர்.

எல்லாம் அந்த யோகி உண்மை விளம்பியால் நடந்து விட்டதை உணர்ந்த அரசன்,


யோகியை அரசவைக்குக் கொண்டு வர உத்தரவிட்டான். யோகி அரசவையை அடைந்தார்.

"தாங்கள் உண்மை விளம்பி என்பது யாவரும் அறிந்ததே. காவலர்கள் கேட்டதற்கு தாங்களும், "ஆம் ஒருவன் இவ்வழியே ஓடினான்" என்று கூறிவிட்டீர். எல்லாம் அறிந்த நீங்கள் அவன் கையில் ஏதாவது மூட்டை இருந்ததா எனப் பார்த்திருக்கலாம். எதற்காக அவனைத் தேடுகிறீர்கள் என்று கேட்டிருந்தால் இந்த அநீதி நடந்திருக்காது.

"தாங்கள் சொன்ன யோசனையற்ற உண்மை நிரபராதியைக் குற்றவாளியாக்கி விட்டதே. உண்மை பகர்வதிலும் சிந்தித்துச் செயற்பட்டிருந்தால் நன்மை ஏற்படுமா எனத் தாங்கள் ஊகித்திருக்க வேண்டும். இருப்பினும் தங்களால் ஏற்பட்ட இக்குழப்பத்திற்காக ஒரு நாள் சிறையில் தியானம் செய்து தங்களைப் புனிதமாக்கிக் கொள்ளுங்கள்!" என்றான்.

தவறு செய்த காவலர்களைப் பதவி நீக்கம் செய்தார் மன்னர். தன் அவசர புத்திக்கு அபராதமாக ஆயிரம் பொற்காசுகளை நிரபராதிக்கு அளித்தார் மன்னர்.

## மாடு அசைபோடுவது ஏன்?



தற்போது வீடுகளில் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால், மனித நாகரிகம் வளர்வதற்கு முன் காடுகளிலேயே அவை வாழ்ந்து வந்தன.


பல்வேறு வகையான விலங்கினங்கள் வாழ்ந்து வந்த காட்டில், வலிமை குறைந்த விலங்கான மாடுகளுக்கு எதிரிகள் அதிகம் இருந்தன.

இதனால் அவை இரை உண்ணும்போது நன்கு மென்று தின்ன முடியாது.

எதிரி விலங்கு எப்போது தாக்க வருமோ என்ற பயத்துடன் அவசர அவசரமாக உணவை விழுங்கும்.

பின்னர் நேரம் கிடைக்கும்போது அந்த உணவை மறுபடியும் வாய்க்குக் கொண்டு வந்து, நன்றாக மென்று தின்னும். இதற்காக இயற்கையிலேயே அவைகளுக்கு சிறப்பு இரைப்பை அமைப்பு உள்ளது. மாடு மட்டுமின்றி ஆடு, ஒட்டகம், மான் போன்ற பாலூட்டிகளும் அசை போடும் தன்மையுடையன.

## QUIZ என்ற வார்த்தை எப்படி வந்தது தெரியுமா?




டப்ளின் நகரில் ஒரு நாடகக் கொட்டகை. அதன் மனேஜர் டாலி. அவர் தன் நண்பருடன், மொழி தொடர்பாக ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருந்த போது ஆவேசமாகி, "இன்னும் 24 மணி நேரத்தில் அர்த்தமே இல்லாத ஒரு சொல்லை பிரபலமாக்கிக் காட்டுகிறேன், பார்!" என்று சவால் விட்டார்.

மறுநாள் காலை, டப்ளின் வாசிகள் கண் விழித்தபோது, டப்ளின் நகரச் சுவர்கள் எல்லாவற்றிலும் **QUIZ** என்ற வார்த்தை காணப்பட்டு, அப்படியென்றால் என்ன என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டு தலையைப் பிய்த்துக்கொண்டார்கள்.

இந்தச் சொல் அன்று மாலைக்குள் டப்ளின் நகரம் முழுக்கப் பிரபலமான சொல்லாகி விட்டது. டாலி ஜெயித்து விட்டார்.

அன்றிலிருந்து, கேள்வி கேட்டு பதில் வரவழைப்பதற்கு 'குயிஸ்' என்கிற சொல் பயன்பட ஆரம்பித்தது. 1780 இல் உருவான சொல் இது!

உன்னைத் திருத்திய பின் ஊரைத் திருத்து.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நீங்கள் கேட்டதை அவர்கள் திருப்பிக் கேட்டால்

புதிய அரசியலமைப்பை அமுலாக்கும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஓரணியில் ஒற்றுமையாக நிற்க வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சம்பந்தரின் இந்தக் கோரிக்கை சம்பிரதாயமானது மட்டுமே. அதாவது ஒருபோதும் நடக்காது நடக்கவும் முடியாது என்ற விடயங்களை நடக்க வேண்டும் எனக் கேட்பதுதான் சம்பிரதாயக் கோரிக்கையாகும்.

இதனை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின் புத்தாண்டு, தீபாவளி, வெசாக், நத்தார், றம்ழான் ஆகிய புனித நாட்களில் ஆசிச் செய்தி விடுக்கின்ற நாட்டின் அரசியல் தலைவர்களும் சமயவாதிகளும்,

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவட்டும்; ஒற்றுமை ஓங்கட்டும்; அனைத்து மக்களும் சமத்துவமாக வாழட்டும் என்றெல்லாம் ஆசி வழங்கி வாழ்த்துவார்கள்.

இவை வெறும் வார்த்தை ஜாலங்களேயன்றி உள்ளார்ந்தமானவையல்ல.

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டிய ஒருவர் அதனை செயல்படுத்தாமல் ஆசியுரையில் தெரிவிப்பதென்பது சம்பிரதாயத்துக்கானதேயன்றி நிஜமானதல்ல.

அதுபோல இனவாதத்தை, மதவாதத்தைத் தூண்டிவிடுகின்ற ஒருசில மதத் தலைவர்கள்; சகலரும் சமத்துவமாக வாழட்டும் என்கிறார்கள்.

பெளத்தத்துக்கு முன்னுரிமை என்பது ஒரு புறம். இன்னொரு சமயத்தினரின் நிலத்தை தமது சமயத்துக்கு ஆக்கிரமிப்பதை மறுபுறமாகச் செய்து கொண்டு, சமய சமூக சமத்துவம் ஓங்கட்டும் என்று ஆசி வழங்குவார்கள். இதைத்தான் சம்பிரதாயச் சடங்கு என்று கூறுவார்கள்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் ஒரு சம்பிரதாயச் சடங்காக மைத்திரி, ரணில், மகிந்த ஆகிய மூவரும் ஒன்றுபட்டு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுள்ளார்.

சம்பந்தரின் இந்தக் கோரிக்கை ஒருபோதும் நடைமுறைச் சாத்தியமற்றது என்பது அவருக்கே நன்கு தெரியும்.

இருந்தும் அரசியல் கலாசாரத்தில் இத்தகைய சம்பிரதாயங்கள் சடங்குகளாக இருப்பதால் அதனை சம்பந்தரும் செய்துள்ளார்.

இப்போது மைத்திரி, ரணில், மகிந்த ஆகிய மூவரும் ஒன்றுசேர்வது என்ற சம்பந்தரின் கோரிக்கைக்கு அந்த மூவரும் பதில் கோரிக்கையை முன்வைத்தால் அங்குதான் சம்பந்தர் ஐயா தலைகுனிய வேண்டி வரும்.

அதாவது புதிய அரசியலமைப்பை அமுலாக்க வேண்டும் என்று கேட்கும் நீங்கள் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஒற்றுமையாக ஓரணியில் நில்லுங்கள் பார்க்கலாம் என்றால், அங்குதான் சிக்கல் எழுகை பெறும்.

எப்போதும் ஒருகோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னதாக அந்த விடயத்தை முன்வைப்பதற்கு அந்த விடயத்தை நாம் நிறைவேற்றியவர்களாக இருப்பது கட்டாயமானது. இதைத்தான் மக்கள் சமூகம் எதிர்பார்க்கிறது.

# போதைக்கு அடிமையான 17 வயது மாணவனை மறுவாழ்வுக்கு அனுப்புமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருளுக்கு அடிமையாகிய 17 வயது மாணவனை பொலநறுவை கந்த காடு மறுவாழ்வு நிலையத்தில் அனுமதித்து ஒரு ஆண்டு மறுவாழ்வு வழங்குமாறு யாழ்ப் பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் உத்தரவிட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த டிசம்பர் மாத இறுதியில் 17 வயது மாணவன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்ற அப்போதைய நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

மாணவனை ஒரு வார காலத்துக்கு சான்று பெற்ற சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. வழக்கு கடந்த 4ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் முன்னிலையில் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரது தந்தையும் மன்றில் முன்னிலையானார்.

"மகன் எமது சொல்லைக் கேட்பதில்லை. போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்டார். வீட்டில் இருந்து பொருள்களைத் திருடிச் சென்று விற்றுவிட்டு நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பொருள்களைப் பயன்படுத்துகிறார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் சித்தியடையவில்லை. பாடசாலைக்கும் ஒழுங்காகச் செல்வதில்லை. அவரை சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பி நல்வழிப்படுத்தவேண்டும்" என மாணவனின் தந்தை மன்றிடம் கேட்டுக்கொண்டார்.

தந்தையாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனிசாமி பீற்றர் போல், மாணவனை வரும் ஒரு ஆண்டுக்கு பொலநறுவை கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்தில் தடுத்து வைத்து மறுவாழ்வு வழங்குமாறு உத்தரவிட்டார். மாணவனின் மறுவாழ்வு நிறைவடையும் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-9)

## ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி

இந்த ஆண்டுக்கான முற்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு நேற்று அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி நேற்று முதல் ஒருவாரக் காலத்துக்குள் இது வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

இரண்டு வாரங்களில் முற்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முனவைக்கப்பட வேண்டும்.

அதன்படி, பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி முற்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை நாடாளுமன்றில் முன்வைக்கவும், மார்ச் மாதம் 5ஆம் திகதி பாதீட்டை முன்வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு மார்ச் மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகி, இறுதி வாக்கெடுப்பு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி நடத்தப்படும். (ம-3)

## அங்கொடயில் துப்பாக்கிச்சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அங்கொட சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் 23 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உந்துருளியில் பிரவேசித்த இரண்டு பேர் இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு, பின்னர் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

2019.01.15 அன்று சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப் பரீட்சைகளுக்காக முற்பதிவு செய்தவர்கள் அன்றைய தினம் தைப்பொங்கல் தினமாக இருக்கின்ற காரணத்தால் தங்களுக்கு வசதியான வேறு ஒரு தினத்தினை (திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில்) எமது சாரதி அனுமதிப்பத்திர கிளையின் காசாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

இதனால் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியத்திற்காக மனம் வருந்துகின்றோம் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ்ப்பாணம் பிரதி ஆணையாளர் வை. பரம்தாமன் தெரிவித்துள்ளார். (இ)


## உடல் ஆரோக்கியமாக இருக்க...

- உடற்பயிற்சியும் நடைபயிற்சியும் தியான பயிற்சியும் மேற்கொள்ள வேண்டும். தினமும் காலை மாலை என இரு வேளை அரை மணி நேரமாவது நடந்து செல்ல வேண்டும்.
- மனதிற்கு அனுமதி தரும் மெல்லிசையை கேளுங்கள். அதிக சப்தம் கூடாது. போதைப் பொருட்களைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியமான தீங்கு விளைவிக்காத உணவுகளை பழங்களைச் சாப்பிடுங்கள் .
- மனதில் குழப்பங்களை ஏற்படுத்தும் விதமான காரியங்களை செய்தால் உடல் நலம் கெட வாய்ப்புகள் உண்டாகும்.
- பதற்றத்தையும் அவசரத்தையும் விலக்கி விட்டு பொறுமைகளையும் நிதானத்தையும் கடைபிடித்து வாழ்ந்தால் மன சோர்வு தோன்றாது.
- மனசோர்வு இல்லாதிருந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். தரமான நூல்களை வாங்கி படித்து பயன் அடைந்தால் உடல் நலம் சீராகவே காணப்படும். உடலின் நலம் உயிரின் பலம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில லக் ஸபானா வீதி, தோணிக்கல், ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கன் பிட்டியிலிருந்து செம்மண் தீவு வரை, செம்மண்தீவு Ware House, பென்பெர்கோ, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலா வத்துறை கடற்படை முகாம், முள்ளிக் குளம கடற்படை முகாம், முருங்கனிலிருந்து உயிலங்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்.



- ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சுமை முழுவதும் அவரவர் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணிச் செயலாற்றுங்கள்.
- வேதாந்தம் கூறும் தர்மநெறி முறைகளை வீட்டுக்கு வீடு சென்று எடுத்துச் சொல்லுங்கள். ஒவ்வொருவரிடமும் இருக்கும் தெய்வீகத்தன்மையை உணர வழி காட்டுங்கள்.
- கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தை நாலாபுறங்களிலும் பரவ விடுங்கள். பரபரப்புடன் பணியில் ஈடுபடுங்கள். பொதுநலத்துடன் தொண்டாற்றுங்கள்.
- நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். நிமிர்ந்து நின்று துணிவுடன் நடை போடுங்கள்.
- தூய்மையுள்ளவராக நீங்கள் இருந்தால், தூய்மை இல்லாததைப் பார்க்க முடியாது. ஏனென்றால், உண்மையில் உள்ளே இருப்பது தான் வெளியிலும் நமக்குத் தெரிகிறது.
- கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

# கடந்த ஆண்டு அதிக வெற்றிகள் சென்றலைட்ஸ் அணி சாதனை



யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 2018 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அரங்கில் நிகழ்த்தப்பட்டிராத புதிய சாதனையொன்றை தம்வசப்படுத்தியுள்ளது.

2018 இல் விளையாடிய எந்தப் போட்டிகளிலும் தோல்வியுறாத அணியாக அந்த அணி வலம் வருகின்றது.

சென்றலைட்ஸ் அணி மொத்தமாக 26 போட்டிகளில் 2018 ஆம் ஆண்டில் விளையாடி, அனைத்திலும் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இவற்றில், ஜொலிஸ்ரார்ஸ் வெற்றிக்கிண்ணம், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வெற்றிக்கிண்ணம் (கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்), இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான வெற்றிக் கிண்ணம் என்பனவற்றையும் தம்வசப்பத்தியுள்ளது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையில் யாழ். மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் பல நடைபெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டிகளில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 24 விளையாட்டுக் கழகங்களின் அணிகள் பங்கு பற்றி வருகின்றன.

இதில் ஒரு அணியாக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியும் பங்குபற்றி வருகின்றது.

அந்த வகையில், ஜனவரி மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற ஆளுநர் வெற்றிக்கிண்ண போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியுடனான வெற்றி, ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண முதற்சுற்று ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார்ஸ் அணியுடனான வெற்றி, ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண தகுதிகாண் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியுடனான வெற்றி, ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண முதல் சுற்று அரையிறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியா அணியுடனான வெற்றி, மே மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ண அரையிறுதியில் மானிப்பாய் பரிஸ் அணியுடனான வெற்றி, மே மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியுடனான வெற்றி, மே மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில், ரைரோன் அணியுடனான வெற்றி, மே மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியுடனான வெற்றி, ஜூன் மாதம் 3 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில், றெஜின்போ அணியுடனான வெற்றி, ஜூலை மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியின் காலிறுதியில் விங்ஸ் அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியின் அரையிறுதியில் பற்றீசியன் அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப் போட்டியில் றெஜின்போ அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற ஜொலிஸ்ரார்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டியில், விங்ஸ் அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியில், ஜொலிஸ்ரார்ஸ் அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியில், யாழ்ப்பாணம் சென்றல் அணியுடனான வெற்றி, ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியில், டிறிபேக் ஸ்ரார்ஸ் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியில், திருநெல்வேலி கிரிக்கெட் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெற்ற ஜொலிஸ்ரார்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டியின் காலிறுதியில், திருநெல்வேலி கிரிக்கெட் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் பிரிவு 3 அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியா அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் ரைரோன் அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற ஜொலிஸ்ரார்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டியின் அரையிறுதியில்; யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியுடனான வெற்றி, செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற ஜொலிஸ்ரார்ஸ் வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியுடனான வெற்றி, ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற ஏபி அணி நடத்திய யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் சுற்றுப்போட்டியின் பிளே ஓவ் சுற்றில், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியுடனான வெற்றி, டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற அரியாலை சுதேசிய நாள் கொண்டாட்ட இருபது-20 சுற்றுப்போட்டியின் முதற் போட்டியில், கிறாஸ்கொப்பர்ஸ் அணியுடனான வெற்றி என சென்றலைட்ஸ் அணியின் இந்த வெற்றிப் பயணம் தொடர்ந்து செல்கிறது.

2018 ஆம் ஆண்டில் தொடர் வெற்றிகளைப் பெற்று வந்த சென்றலைட்ஸ் அணி, 2019 இலும் வெற்றிநடை போடுகின்றது. ஜனவரி 7 ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் கிரிக்கெட் லீக் கிண்ணத்தையும் வென்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-26)

# மருத நிலா அணியை வீழ்த்தி சம்பியனானது யங்ஸ்ரார் அணி





ஒப்பந்த நிறுவனம் ஒன்று நடத்திய அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வென்று ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசினை வெற்றி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பித்த இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அனைத்து போட்டிகளும் வெள்ளி, சனி கிழமைகளில் முழுநேரமாக இடம்பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய மருதநிலா மற்றும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகங்கள் மோதியதில் யங்ஸ்ரார் கழகம் இரண்டு கோல்களை போட்டு 2:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசுடன் வெற்றிக்கேடயத்தையும் இரண்டாம் இடத்தை பெற்ற மருதநிலா 50 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் இரண்டாவது வெற்றிக்கிண்ணத்தையும் வென்றுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், தமிழ் விருட்சத்தின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் மற்றும் யுனிபைட் விளையாட்டுக்கழகத்தின் மூத்த விளையாட்டு வீரர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள். A Group construction & consults நிறுவனத்தின் பணிப்பாளர் பத்மநாதன் தயாபரன் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

# யாழ்.புறா பந்தயக்கழகத்தின் புறாக்களுக்கான போட்டிகள்





யாழ்.புறா பந்தயக் கழகம் நடத்திய புறா பந்தயத்திற்கான போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

றம்பாவவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் கெக்கிராவையிலிருந்து மன்னாருக்குமான இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகள் இரண்டும் அன்றையதினம் காலை 6.45 மணியளவில் ஆரம் பமாகியிருந்தது.

சுமார் 10.45 மணியளவில் போட்டியில் பங்கு கொண்ட புறாக்கள் அனைத்தும் தமது இருப்பிடத்தை வந்தடைந்தன.

இருமாவட்டங்களை ஒன்றிணைந்து ஒரே நேரத்தில் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும்.

வெற்றிபெற்ற புறாக்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க)

## புதிய அரசியல்...

எனினும் இந்த ஆட்சியில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் என தமிழ் மக்கள் நம்ப வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியல் அமைப்பு குறித்த கருத்துக்கள் அரசியல் ரீதியாக முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டினை வினவிய போதே அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக இதனைக் குறிப்பிட்டார்.

இப்போது அரசாங்கம் அபிவிருத்தி என்ற பெயரைக் கூறிக்கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதிலும் இதன் பின்னணியில் முழுமையாக கடன் சுமை மட்டுமே உள்ளது.

கடன்களில் மட்டுமே இந்த நாடு அபிவிருத்தி கண்டுள்ளது. மாறாக எந்த முதலீட்டு வேலைத்திட்டங்களும் இல்லை. ஆகவே மக்கள் இதனை சரியாக விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## ஹெரோயினுடன்...

குழப்பம் ஏற்பட்டது. எனினும் நீதிமன்றப் பிடியாணையுடன் சென்று சந்தேகநபரை சில மணிநேரங்களிலேயே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டில் குடும்பத்தலைவர் ஒருவரை யாழ்ப்பாண சிறப்பு பொலிஸ் பிரிவினர் அரியாலைப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் 2லட்சம் ரூபாய் பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது. சந்தேகநபர் விற்பனை செய்யும் நோக்குடனேயே ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நேற்று திங்கட்கிழமை அழைத்து வந்தனர். எனினும் சந்தேகநபர் சார்பில் நகர்த்தல் பத்திரம் இணைக்கப்பட்டு மற்றொரு வழக்கு மன்றில் கூப்பிடப்பட்டது. அந்த வழக்கு நிறைவடைந்ததும் சந்தேகநபர் நீதிமன்றிலிருந்து வெளியேறினார்.

சந்தேகநபருக்கு எதிராக புதிய வழக்கை கொண்டுவரும் தகவலை யாழ்ப்பாணம் பொலிஸார் சிறைச்சாலை உத்தியோகத்தர்களிடம் தெரிவிக்கவில்லை. அதனால் நீதிமன்றிலிருந்த பொலிஸார் அசமந்தமாக இருந்த தருணத்தில் சந்தேகநபர் பதற்றமின்றி நீதிமன்றிலிருந்து வெளியேறிச் சென்றார்.

இதனால் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு வழக்கு மன்றில் கூப்பிடப்பட்ட போது சந்தேகநபர் மன்றிலிருந்து வெளியேறி விட்டார். அதனால் பொலிஸார் குழப்பமடைந்தனர். சந்தேகநபரைக் கைது செய்வதற்கு பிடியாணை உத்தரவை நீதவான் வழங்கினார்.

உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார், சந்தேகநபரைத் தேடி அவரது வீட்டுக்கு விரைந்தனர். அங்கு சந்தேகநபர் இருந்துள்ளார். அவரைக் கைது செய்த பொலிஸார், நேற்று மாலை யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

சந்தேகநபரும் அவரது மூத்த சகோதரனும் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என்பது விசாரணையில் தெரிய வந்தது.

எனவே சந்தேகநபரின் பின்னணியில் உள்ளவர்களைக் கைது செய்வதற்கு வசதியாக அவரை வரும் 14 நாள்களுக்கு பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கவேண்டும் என்று பொலிஸார் நீதவானிடம் தடுத்துவைத்து விசாரிக்கும் விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

அதனை ஆராய்ந்த நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல், சந்தேகநபரை 7 நாள்களுக்கு பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதித்து வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார். (ம-9)

## தமிழருக்கும்...

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இளைஞர் முன்னணி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அதன் தலைவர் சாந்த பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அடிப்படைவாத உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கும், வடக்கு கிழக்கு மக்களுக்கும் இடையிலான பந்தத்தை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர். ஆனால் அது நடக்காது.

அதேநேரம் நாட்டுக்கு பொருத்தமான அரசியல் யாப்பு ஒன்றுக்கு தாங்கள் ஆதரவு வழங்க தயாராக இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் எந்த பிளவுகளும் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர கட்சியின் பல்வகை நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள அனைவரும் ஒன்றிணைந்து ஒரே நிலைப்பாட்டில் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனாதிபதியை, எதிர்கட்சித் தலைவர் முழுமையான கூட்டணியை அமைத்து அரசாங்கத்தை உருவாக்கும் பின்புலத்தை ஏற்படுத்தவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி பலமாக இருக்கிறது என்பது உண்மையாக இருந்தால், தாங்கள் உடனடியாக தேர்தலை நடத்துமாறு கோருவதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## நீதிமன்றில் பணம்...

பணத்தை செலுத்துவதற்கு கையில் பணத்துடன் நபர் ஒருவர் நின்றுள்ளார். அப்பகுதியில் நின்ற மற்றுமொரு நபர் அவரிடம் இருந்த பணத்தை பறித்துக்கொண்டு நீதிமன்றுக்கு வெளியே ஓடியுள்ளார். அவரை நீதிமன்றில் நின்றிருந்த பொலிஸார் துரத்தி சென்றுள்ளனர். அப்போது நீதிமன்ற வளாகத்தில் சற்று பதற்றநிலை ஏற்பட்டது.

குறித்த நபரை பொதுநூலகத்துக்கு அண்மையில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-9)

## வடக்கு மாகாண...

03 மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில், நேற்று திங்கட்கிழமை அவர் வடக்கு மாகாண ஆளுநராக சுரேன் ராகவன் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஜனாதிபதி ஊடக பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யார் சுரேன் ராகவன்..??

வடக்கு மாகாண ஆளுநராக பேராசிரியர் கலாநிதி சுரேன் ராகவன் ஆசியாவில் முதன் முறையாக ஜேம்ஸ் மெடிசன் நம்பிக்கை புலமைப் பரிசிலை இரண்டு தடவைகள் பெற்றார்.

2005 ஆம் ஆண்டு கென்ட் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற இவர் 2008ஆம் ஆண்டு முதுகலைமாணி முடித்தார். பின்னர் 2008-2011 களில் பிரித்தானிய அரசாங்கத்தின் புலமைப்பரிசிலும் அவருக்கு வழங்கப்பட்டது.

கனடா - ஒன்றாரியோ பல்கலைக்கழகத்தின் ஓஎஸ்ஏபீ விருதினை வென்ற அவர் நேரடி அரசியலில் பெரும் அனுபவசாலியாவார். இவர் தற்போது ஒட்டாவா சென் போல் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக உள்ளார்.

அத்தோடு அவர் மிக முக்கியமாக அவர் ஒரு பௌத்த சிந்தனைவாதியாவார். பௌத்த துறவிகளுக்கும், யுத்தத்துக்குமான இடைத் தொடர்புகள் குறித்த இரண்டு புத்தகங்களையும், ஏனைய சில புத்தகங்களையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

அவரது அரசியல் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் பல முன்னணி பல்கலைக்கழகங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3-9)

## கபே பணிப்பாளர்...

கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி சிறி தென்னக்கோனும் நேற்று ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்

கடந்த 4ம் திகதி ஐந்து மாகாணங்களின் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நேற்று மாலை மூன்று மாகாணங்களின் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்திற்கு கீர்த்தி சிறி தென்னக்கோன் ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## மக்கள் மீது அரசு...

வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க தற்போதைய அரசாங்கத்தினால் முடியும்.

ஆனால் அந்த விடயத்தில் அரசாங்கம் எந்த அக்கறையும் இல்லாது இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

கடன் பெற்றதாக எம்மீது குற்றம் சுமத்தப்படுகின்ற போதும், அந்த கடன்கள் பாரிய வேலைத்திட்டங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டன.

ஆனால் இந்த அரசாங்கம் பெற்ற கடன்கள் அனைத்தும் சுயலாபத்துக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்த போதும், அரசாங்கம் அதனைக் குறைக்கவில்லை.

ஆனால் தாம் பிரதமராக பதவியேற்றதன் பின்னர் 3 தடவைகள் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டன.

அதனைக் கண்டு தற்போதைய பிரதமர் ரணில் உடனடியாக எரிபொருள் விலையை குறைக்க தீர்மானித்தார் என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மன்னார் மடுப் பகுதிகளில் பலவந்தமாக பணம் வசூலித்த 4 இளைஞர்கள் மடக்கிப்பிடிப்பு

(மன்னார்)

தமிழ் மக்களின் வீடுகளிற்கு சென்று பணம் வசூலித்த அநுராதபுர பெரும்பான்மையின இளைஞர்கள் நால்வரை மடுவில் உள்ள மக்கள் மடக்கிப்பிடித்த சம்பவம் ஒன்று நேற்று திங்கட்கிழமை மதியம் இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

மன்னார். மடு. பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள வீடுகளிற்கு சென்று ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்டுவதாக கூறி. சில தமிழ் மக்களை மிரட்டியும் நிதி வசூலித்துள்ளனர்.

தாங்கள் அநுராதபுரம் என தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட பெரும்பான்மையின இளைஞர்கள் நால்வரை சந்தேகமடைந்த அப்பகுதி மக்கள் துரத்தி பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அப்பகுதி கிராம அலுவலர் நடந்த சம்பவத்தை கேட்டறிந்ததுடன், மடு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-285)

# மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கையை பிரதமர் ரணில் உடனே முன்னெடுக்க வேண்டும்

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டினது பிரதமர் என்ற ரீதியில் மாகாணசபைத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனே முன்னெடுக்கவேண்டும் என பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹன ஹெட்டியாராச்சி நேற்று திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எல்லை நிர்ணய மீளாய்வு அறிக்கையினை ஜனாதிபதியிடம் விரைவாக சமர்ப்பித்து. பிரதமர் என்ற ரீதியில் மாகாணசபை தேர்தலை விரைவுப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜனநாயகத்தை மதிக்கும் அரசாங்கம் என்ற அடிப்படையில் மக்களின் தேர்தல் உரிமைகளுக்கு நாட்டினது தலைவர் என்ற வகையில் வாய்ப்பளிக்க வேண்டும்.

தற்போது நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் ஆட்சியில் நாட்டினது பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் என்ற வகையில் ஜனாதிபதியும் பிரதமரும் பொறுப்புக் கூறவேண்டியதுடன், மக்களது தேர்தல் உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பயிற்றுவிப்பாளர்களை நியமிக்க அங்கீகாரம்

அரசாங்க பாடசாலைகளுக்கான விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது;

அதன்படி 3ஆயிரத்து 850 விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பமான போதே அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

### சுபிரி வாசனா

திகதி 2019/01/07
சீட்டிழுப்பு இலக்கம் 1393

| எழுத்து | வெற்றி இலக்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | 35 | 40 | 53 | 67 | 60 | 43 |

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2019/01/07
சீட்டிழுப்பு இலக்கம் 3828

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| L | 3 | 9 | 1 | 2 | 1 | 1 |

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.01.07
சீட்டிழுப்பு இலக்கம் 1997

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| T | 15 | 60 | 71 | 79 |

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 07/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 328

| வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| A | 05 | 20 | 24 | 34 | 40 |

தேசிய லொத்தர் சபை

**Techno World**
வெலிங்டன் சந்தி
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
**A/L 2021**
கணிதம் – தயாளன்
அனைத்துத்துறை மாணவர்களும்
தெரிவு செய்யும் பாடம்
(C-5048)
077 017 5346

**கணக்கீடு – பிரத்தியேகம்**
A/L 2021 ஆசிரியர் – S.R.வின்சன்
ஆரம்பம் – 10.01.2019
R.D.S – மல்லாகம்
(6958) 077 694 7162

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK – 550 /=Kg
கனடா – 900 /=Kg
ஜேர்மனி – 700 /=Kg
நெதர்லாந்து – 700 /=Kg
(C-4942)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## மன்னாரில்...

இந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை 225 ஆவது நாளாக வளாகத்தின் வெளிப் பகுதிகள் அனைத்தும் தோண்டப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு வார காலமாக வளாகத்தில் அடையாளப்படுத்தும் மற்றும் எலும்புக்கூடுகளை அப்புறப்படுத்தப்படும் பணிகள் குறைக்கப்பட்டு விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியின் சதொச வளாகத்திற்கு அருகாமையில் உள்ள கடைத் தொகுதிக்கு செல்லும் ஒரு பகுதி மூடப்பட்டு விரிவுபடுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில், விரிவுபடுத்தப்படும் பகுதிகளிலும் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தற்போது வரை 282 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 277 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் 20 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

**Techno World**
வெலிங்டன் சந்தி
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
**A/L**
தொழில்நுட்ப பிரிவு
**A/L 2021**
புதிய வகுப்புக்கள்
திங்கள் – வெள்ளி, சனி, ஞாயிறு
காலை : 8.00 – 11.00
(C-5048)
077 017 5346

## உறுப்பினர்களிடம் மன்னிப்பு...

குழு உறுப்பினர் கூட்டத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த ஆண்டில் தேர்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு பாராளுமன்றிற்கு உள்ளேயும், வெளியேயும் அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசாங்கமொன்றை நிறுவ வேண்டும். சுயாதீன தொலைக்காட்சியில், இடம்பெற்றுள்ள சம்பவம் குறித்து நான் கவனம் செலுத்தி வருகின்றேன்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பில் வெளியிடப்பட்டு வரும் கருத்துக்கள் குறித்து கவலையடைகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் எவருக்கேனும் மன வருத்தம் இருந்தால் அதற்காக மன்னிப்பு கோருகின்றேன் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ம-3)

## எல்லை தாண்டிய...

செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு படகில் வந்து நேற்று பகல் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 4 பேரை நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் இவர்களை யாழ் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர். பின்னர் மீனவர்கள் நேற்று இரவு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சனின் வாசஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குறித்த மீனவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## 2019 அரச செல...

டத்தில் 2 ஆயிரத்து 903 பில்லியன் ரூபாய் மாத்திரமே அரச செலவீனத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டுக்கு 4 ஆயிரத்து 550 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

மேலும் 2018ஆம் ஆண்டு அரச இறை வருமானமாக 2 ஆயிரத்து 258 பில்லியன் ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 390 பில்லியன் ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு மூலதனம் மற்றும் தேறிய கடன்களுக்கு 751 பில்லியன் ரூபாய் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (ம-3)

## கிளிநொச்சியில்...

என்பவரே சடல மாக மீட்கப்பட்டவராவார்.

மரணம் தொடர்பாக சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி, பொலிஸார் ஆகியோர் மேற்கொண்டனர். (ம-3)

**தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் அச்சகம் ஒன்றுக்கு (CorelDraw, Adobe Photoshop அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(6977) 077 617 4029

**Company Expanding**
**வேலைவாய்ப்பு 2019**
Holdings Lanka நிறுவனத்துக்கு ஆரம்ப கட்டமாக வட, கிழக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் அலுவலக பணிகளுக்கு 75 இளைஞர், யுவதிகள் நேர் முகப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.
தொழில் அனுபவம், தகைமை தேவையில்லை
தொடர்புகளுக்கு : 077 123 7692
(6978)

**ஆங்கில வகுப்பு**
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (6947)
தொடர்புகளுக்கு : 076 707 0069
M.Suren


**தமிழ்** 6 தொடக்கம் 11 வரை
தொ.பே.இல. : 077 105 1015
ஆசிரியர் – திரு.க.மு.நித்தி
(யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி)
தாவடி, கொக்குவில் (C-5049)

**குவைத் வேலைவாய்ப்பு**
மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள்
(இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)
மோ. சைக்கிள் மெக்கானிக்
கார் சாரதி
(மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)
உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.
ஆரம்ப கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200
சம்பளம் ரூ. 71,640/-
077 00 38 215
021 221 9 221
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
(C-5041)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சசிகரன் (கொலின்)

(அபினாஸ் ஆட்டோ உரிமையாளர்)



நல்லூர் அரசடி வீதி 4ஆம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் நல்லூர் அம்மன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சசிகரன் (கொலின் - அபினாஸ் ஆட்டோ உரிமையாளர்) 06.01.2019 இல் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சின்னக்கிளி தம்பதியினரின் ஏகபுத்திரனும், கலைச்செல்வியின் அன்புக் கணவரும், அபினாஸ் (சென் ஜோன் கல்லூரி மாணவன்), அஜே (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவன்), சபினா (ஆனைப்பந்தி மெதடிஸ் வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணம் - மாலா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அமரர் சறோஜா - கனகரத்தினம், சாரதா - சிவராசா, சசிகலா - எக்மன் (கொலன்ட்), சகுந்தலா-கண்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், றஜீந்திரன், சுசிகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (08.01.2019) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அம்மன் வீதி நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் – குடும்பத்தினர்
கா.ஸ்ரலின்ராஜா (டாலிங்)
அன்புச் சகோதரன்

(6973)

**வேலை வாய்ப்பு**



உனக்குள் ஒரு தொழிலதிபர் ...
மிக விரைவில் ஒரு மாற்றம் ...

உங்களின் வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையா???
முழுநேரமாகவோ... பகுதி நேரமாகவோ...
எங்கள் நிறுவனத்தில் இணையுங்கள்.



வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் உங்களின் தரத்தினை உயர்த்திக்கொள்ள சர்வதேச நிறுவனமொன்றில் இணைந்து கொள்ள நல்லதொரு தருணமிது !!!

→ **வெல்த் பிளானர்**
- A/L பூர்த்தியடைந்தவர்கள்
  → முதலாவது சிறந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ள
- இல்லத்தரசிகள்
  → மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ள



→ **வெல்த் பிளானர் மனேஜர்**
- 1 வருட வேலை அனுபவம் உள்ளவர்கள்
- A/L சித்தியடைந்திருத்தல்

**அனுகூலங்கள் :**
- சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு
- எல்லையற்ற வருமானம்
- ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டு பயணங்கள்
- வாகன, வீட்டு, மேற்படிப்பிற்கான கடன் வசதி

தொடர்புகளுக்கு :
076 285 5601
(6976)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.